தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோமாரி நோயால் அடிமாடு விற்பனை பாதிப்பு

கோமாரி நோய் பாதிப்பை தொடர்ந்து, தமிழக அடிமாடுகளுக்கு கேரள அரசு தடை விதித்துள்ளது. கம்பத்தில் பல ஆயிரக்கணக்கான அடிமாடுகள் விற்பனைக்கு கொண்டு செல்லமுடியாமல் உள்ளன. தீவன தட்டுப்பாட்டால் அடிமாடு வியாபாரிகள் திணறி வருகின்றனர்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கிகால்நடைகள் உயிரிழந்தன. நோயைக் கட்டுப்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

கோமாரி நோய் காரணமாக தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு அடிமாடுகளை கொண்டுவர கேரள அரசு கடந்த மாதம் தடை விதித்தது. ஆந்திரா மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து, கேரளாவுக்கு கொண்டு செல்வதற்கு முன்பு, தேனி மாவட்டம் கம்பத்தில் கால்நடை மருத்துவ குழுவினரால், மருத்துவபரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டே அடிமாடுகள் லாரிகளில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

இந்நிலையில், மருத்துவ சான்றிதழ் பெறப்பட்ட ஆரோக்கியமான அடிமாடுகளையும் கொண்டு செல்வதற்கு கம்பம்மெட்டு, குமுளி கேரள சோதனை சாவடிகளில் கடும் நடவடிக்கை மேற்கொண்டு, திருப்பி அனுப்புகின்றனர். இதனால் கம்பம் பகுதியில் பல ஆயிரக்கணக்கான அடிமாடுகள் தேங்கி, விற்பனை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அடிமாடு வியாபாரி செல்லப்பாண்டி கூறுகையில், கோமாரி நோய் தாக்குதல் காரணமாக அடிமாட்டு வியபாரிகளும், தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புக்கும், பொருளாதார சிக்கலுக்கும் உள்ளாகி உள்ளோம். கிறிஸ்துமசை

முன்னிட்டு கோடிக்கணக்கான ரூபாய் முடக்கி வாங்கப்பட்ட அடிமாடுகள், கேரள அரசின் தடையால் கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடுமையான தீவனத் தட்டுப்பாடு உள்ள சூழ்நிலையில், தீவனம் வாங்கி அடிமாடுகளை பராமரித்து வருகிறோம். வாங்கிய விலையை பராமரிப்புச் செலவு பல லட்சமாகி வருகிறது.

இந்த தொழிலை நம்பியுள்ள வியாபாரிகளும், 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட கூலி தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோய் உள்ள மாடுகளை கொண்டுவருகிறோம் என்ற அச்சமிருந்தால், கேரள மருத்துவ குழு, தமிழக மருத்துவ குழு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தி, ஆரோக்கியமான மாடுகள் என்று சான்றிதழ் அளிக்கும் மாடுகளை கொண்டு செல்ல தயாராக இருக்கிறோம் என்றார்.

அடிமாடு வியாபாரிகள் நலனை கருத்தில் கொண்டு இடுக்கி-தேனி மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அடிமாடு வியாபாரிகள் நலச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

**ஓபல் பச்சை நிற சான்று அட்டை பெற்ற விதைகளை மட்டுமே விற்க வேண்டும்**

ஒபல் பச்சை நிற சான்று அட்டைகள் பெற்ற விதைகளை மட்டுமே விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணபிரசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம் வருமாறு: விதைகள் தான் விளைச்சல் உற்பத்திக்கு அடிப்படை காரணமாக இருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்கவும், தரமான விதைகளை உற்பத்தி செய்யவும், கலப்படத்தை கட்டுப்படுத்தவும் வேளாண்மை துறையின் விதை ஆய்வு மையம் மூலம் அரசு பல்வேறு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில் சட்டவிதிமுறைப்படி காய்கறிகள், உணவு பயிர் விதைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, பழ வகைகள் மற்றும் தீவனப் பயிர்களின் விதைகளின் விற்பனை கட்டுப்படுத்தப்படும்.

அதே சமயம் சான்றளிப்பு துறையால் நிர்ணயிக்கப்பட்ட தரத்துக்குகேற்வும், இனத் தூய்மை, முளைப்புத் திறன், விதை நேர்த்தி, நோய் தாக்காத தன்மை கொண்ட தரத்திற்கேற்ப விதைகளுக்கு சான்று அளிக்கப்படுகிறது. விவசாய விதை விற்பனை நிலையங்களிலும், வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விற்கப்படும் விதை பாக்கெட்டுகளில் ஒபல் பச்சை நிறத்தில் சான்று அட்டைகள் பொருத்தப்பட்டிருக்கும்.

அந்த அட்டையில் விவர அட்டை எண், பயிர்களின் ரகம், குவியல் எண், விதை பரிசோதனை செய்யப்பட்ட நாள், இனத் தூய்மை, முளைப்புத் திறன், குறைந்தபட்ச விதை நேர்த்தி, நிகர எடை, விற்பனையாளர் பெயர், எந்தப் பருவத்தில் விதைப்பது, எந்த நிலங்களில் விதைக்கலாம் என்பது குறித்த விவரங்கள் இடம் பெற்றிருக்கும். இதுபோன்றவைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**"கால்நடைகளுக்கு உலர் தீவனம்'**

*நீலகிரியில் நிலவும் தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் உலர் தீவனம் வழங்கப்படும் என ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளார்.*

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்துக்கு ரூ.6.83 லட்சம் ஒதுக்கப்பட்டு, ஓட்ஸ் பசுந்தீவனம் விவசாயிகளால் பயிர் செய்யப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கால்நடை மருத்துவமனையில் மைய கிடங்கும், கோத்தகிரி கால்நடை மருந்தகம், குன்னூர் கால்நடை மருந்தகம் மற்றும் உதகை கால்நடை மருத்துவமனை ஆகிய நிலையங்களில் உப கிடங்குகள் அமைக்கவும் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைக்கு ஒரு நாளைக்கு மூன்று கிலோ உலர் தீவனம் என்ற அளவில் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்துக்கு தேவையான உலர் தீவனம் வழங்கப்படும். இத் திட்டம் விவசாயிகளின் தேவைக்கேற்ப இரண்டு மாதம் முதல்

மூன்று மாதம் வரை செயல்படுத்தப்படும். விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ உலர் தீவனத்துக்கு ரூ.2 வீதம் வசூலிக்கப்படும். இந்தத் தொகை நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். நீலகிரி மாவட்டத்திலுள்ள கால்நடை நிலையங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் செயலர்களிடம் தங்களது குடும்ப அட்டையுடன் சென்று பெயர்களை பதிவு செய்து கொண்டு, தங்களது கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனங்களை பெற்று பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத் தொகை**

வேலூர்-திருவண்ணாமலை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.9.44 கோடி மதிப்பில் ஊக்கத் தொகையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.சி.வீரமணி சனிக்கிழமை வழங்கினார். வேலூர் சத்துவாச்சாரி ஆவின் நிறுவனத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமை தாங்கினார். பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி அமைச்சர் பேசியது: தமிழக முதல்வர் சரியான நேரத்தில பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியுள்ளார். 2012-13-ஆம் ஆண்டில் ஈட்டிய லாபத் தொகையில் 49,571 பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் ரூ.9.44 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியில் சேலம் மாவட்டம் முதலாவது இடத்திலும், வேலூர் மாவட்டம் இரண்டாவது இடத்திலும் உள்ளன. அரசின் ஊக்கத் தொகையை பயன்படுத்தி பால் உற்பத்தியாளர்கள் பால் வளத்தை பெருக்க வேண்டும் என்றார் வீரமணி.

ஆவின் ஒன்றியத் தலைவர் த.வேலழகன், துணைத் தலைவர் ஆர்.வனரோஜா, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சி.ஏழுமலை, ஆவின் பொது மேலாளர் மு.பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் அளிப்பு

தருமபுரியில் 69 விவசாயிகளுக்கு ரூ.60.25 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமை வகித்தார்.

இதில், 69 விவசாயிகளுக்கு ரூ.23.64 லட்சம் மானியத்தில் மொத்தம் ரூ.60.25 லட்சம் மதிப்பிலான பவர் டிரல்லர் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள், உபகரணங்களை வழங்கி அவர் பேசியது:

நிகழாண்டில் 399 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்க ரூ.191.40 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தற்போது களை எடுக்கும் இயந்திரம், பவர் டில்லர், உழுவை இயந்திரம், வைக்கோல் கட்டும் இயந்திரம், தெளிப்பான்கள், கதிரடிக்கும் இயந்திரம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் கே.முருகேசன், உதவி செயற்பொறியாளர்கள் எம்.பச்சியப்பன், சி.தங்கராஜ், கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ஆர்.பாண்டியன் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க கொ.ம.தே.க. வலியுறுத்தல்

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் தருமபுரி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மொரப்பூரில் அதன் மாவட்டச் செயலாளர் ஜி.அசோகன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது. தற்போது நிலவும் மின் வெட்டு பிரச்னையால் விவசாயம், சிறு தொழில்கள் அழிந்து வரும் சூழ்நிலையில் உள்ளன. தொழில்சாலைகளுக்கு இணையாக விவசாயத்துக்கும் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டம், கே.ஈச்சம்பாடி நீர்தேக்கத்தின் பாசனக் கால்வாயை மொரப்பூர் வரை நீட்டிக்க வேண்டும். கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு தலா ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை (டிச. 29) நடைபெற உள்ள கட்சியின் அரசியல் எழுச்சி மாநாட்டில் தருமபுரி மாவட்டத்தில் இருந்து 200-க்கும் மேற்பட்ட வாகனங்களில் நிர்வாகிகள் செல்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் கே.செந்தில்முருகன், எம்.செல்வகுமார், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் வி.குமரவேல், மாவட்டப் பொருளாளர் கே.தமிழரசு, மாவட்டச் செய்தி தொடர்பாளர் காமராஜ், இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் சுதாகர், ஒன்றியச் செயலாளர்கள் என்.சிவன், ஜி.என்.நரசிம்மன், எம்.சரவணன், பி.செந்தில், ஒன்றியத் தலைவர்கள் இளங்கோ, மகாலிங்கம், கவியரசு, சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பால் கொள்முதல் விலை உயர்வு: முதல்வருக்கு நன்றி

பால்கொள்முதல் விலையை ரூ. 3 உயர்த்தி வழங்கிய முதல்வருக்கு திருநெல்வேலி ஆவின் நிர்வாகக்குழு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி ஆவின் நிர்வாகக்குழுக் கூட்டம் சனிக்கிழமை அதன் தலைவர் எஸ். ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் எஸ். செங்கான் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 3 உயர்த்தி வழங்கிய முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### நெற்பயிரில் களைக்கருவியால் களை எடுக்க வலியுறுத்தல்

சேரன்மகாதேவி வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் களைக்கருவி கொண்டு களை எடுக்க வேண்டும் என வேளாண்துறை கேட்டுக் கொண்டுள்ளது. சேரன்மகாதேவி வேளாண் உதவி

இயக்குநர் ச. சத்யஜோஸ், வேளாண் அலுவலர் ஷேக்நூகு வெளியிட்ட செய்திக் குறிப்பு: நெல் நடவு பணி முடிந்து நெற்பயிர் இளம் தூர்கட்டும் நிலையில் உள்ளது.

நெல் நடவு செய்த 10, 20, 30ஆவது நாளில் இருந்து 40 ஆவது நாள்களில் களைக்கருவி கொண்டு களை எடுக்க வேண்டும். கோனோவீடர் எனும் உருளைக்கருவி அல்லது பெட்ரோல் மூலம் இயங்கும் இயந்திரக்களை எடுக்கும் கருவியின் மூலம் களை எடுக்கலாம்.

இக்கருவிகள் மூலம் களை எடுப்பதால், களைகள் மண்ணில் அமுக்கி விடப்படுகிறது. இதனால் களைச் செடிகளால் மண்ணில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஊட்டச்சத்துக்கள் மீண்டும் மண்ணிற்கே திரும்புகிறது.

களை கட்டுபடுத்தப்படுவதோடு, களைக் கருவி உபயோகிப்பதால் மண் கிளறி விடப்படுகிறது. இதனால் மண்ணில் காற்றோட்டம் ஏற்பட்டு வேர்கள் அதிகமாக படர்ந்து வளரவும், இடும் உரங்களை பயிர்கள் நன்கு உள்கொள்ளவும் முடிகிறது.

கோனோவீடர் எனும் உருளும் களைக் கருவி கொண்டு களை எடுக்கும்போது ஒரு ஏக்கருக்கு 2 தொழிலாளர்கள் போதுமானது. இதன் மூலம் நுண்ணுயிரிகளின் செயல்பாடு ஊக்குவிக்கப்படுகிறது. களைக் கருவியை பயன்படுத்துவதற்கு முதல் நாள் நிலத்திற்கு சீரான நீர் பாய்ச்சுவதன் மூலம் களைக் கருவியை இலகுவாக பயன்படுத்தலாம்.

மேலும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் சூடோமோனாஸ் ஆகியவற்றை ஒரு கிலோ வீதம் 50 கிலோ எருவுடன் அல்லது மண்புழு உரத்துடன் கலந்து நிலத்தில் இட்டு அதன் பின்னர் களைக் கருவியை பயன்படுத்தினால் நுண்ணுயிரிகள் நன்கு மண்ணில் கலக்க ஏதுவாகும்.

ஆகவே திருந்திய நெல்சாகுபடி செய்துள்ள விவசாயிகள் களைக்கருவி கொண்டு களை எடுத்து கூலித் தொழிலாளர்களின் செலவை குறைப்பதுடன், நெல் மகசூலை அதிகரிக்க முடியும் என்றனர் அவர்கள்.

### கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வலியுறுத்தல்

கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்க வேண்டும் என இந்திய கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்திய கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சிஃபா மற்றும் சிஸ்ஃபாவின் நிர்வாகக் குழு கூட்டம், விழுப்புரம் கரும்பு விவசாயிகள் சங்க சமுதாயக் கூடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு எம்.புத்திசிகாமணி தலைமை வகித்தார். தென்னிந்திய கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயல் தலைவர் கே.வி.ராஜ்குமார், தமிழ்நாடு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகள் சங்கங்களின் தலைவர் எஸ்.யோகநாதன், கரும்பு விவசாயிகள் சங்கத்தின் இணைச் செயலர் ஆர்.பரமசிவம், நாகு சுப்பிரமணியன், ஜி.அஜித்தன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் தமிழ்நாடு அரசு நிகழ் பருவத்துக்கு அறிவித்துள்ள கரும்பு மற்றும் நெல் கொள்முதல் விலையை மறுபரிசீலனை செய்து விவசாயிகளின் நலன் கருதி கரும்பு டன் ஒன்றுக்கு வாடகையை கணக்கில் சேர்க்காமல், வயல் விலையாக ரூ.3500-வழங்க வேண்டும். நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும். பொங்கலுக்கு முன்பு அரசு இதுகுறித்து அறிவிப்பு வெளியிட வேண்டும். இல்லையெனில் அரசின் கவனத்தை ஈர்க்கும். வகையில் வரும் ஜனவரி 27-ம் தேதி கோட்டை முன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### புதுவையில் கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.2540 வழங்கப்படும்: முதல்வர்

புதுச்சேரியில் கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ.2540 வழங்கப்படும் என முதல்வர் என்.ரங்கசாமி அறிவித்துள்ளார். தமிழகத்தில் நடப்பாண்டு கரும்பு டன்னுக்கு ரூ.2650 வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதற்கிடையே புதுச்சேரியில் கரும்புக்கான விலையை அரசு நிர்ணயிக்காமல் இருந்தது.

கரும்பு விவசாயிகள், அரசு அதிகாரிகள், ஆலை நிர்வாகத்தினர் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என கரும்பு விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி அரசிடம் கோரிக்கை வைத்தனர்.

முதல்வர் ரங்கசாமி முத்தரப்புக் கூட்டம் டிசம்பர் 29-ஆம் தேதி நடத்தப்படும் என அறிவித்தார். இதன்படி அவரது தலைமையில் ஞாயிற்றுக்கிழமை கூட்டம் நடந்தது. சட்டப்பேரவையில் நடைபெற்ற கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் டிபிஆர்.செல்வம், வேளாண் துறை இயக்குநர் ராமமூர்த்தி, கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண் இயக்குநர் ராஜசேகர், கரும்பு விவசாயிகள் 100-க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். புதுவையில் வெட்டப்படும் கரும்புக்கு விலை நிர்ணயிக்க வேண்டும் , கரும்பு விவசாயிகள் போராட்டம் நடத்தி வந்த நிலையில் முத்தரப்பு கூட்டம் நடந்தது. இதில் சில உடன்பாடுகள் எட்டப்பட்டன.

அதன் படி 2012-2013 ஆண்டுக்கு கொள்முதல் செய்யப்பட கரும்புக்கு ரூ.2540 வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. 2013-2014 ஆண்டுக்கான கரும்புக்கான விலை பின்னர் நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்வது என்று, முன்பணமாக ரூ.2540 வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. 2013-2014 ஆண்டில் 2.5 லட்சம் டன் கரும்பு கொள்முதல் செய்யப்படும் என முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

## விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்ட வலியுறுத்தல்

கர்நாடகத்தில் விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முதல்வர் சித்தராமையா ஏற்பாடு செய்ய வேண்டும் என்று, அந்த மாநில சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் குமாரசாமி வலியுறுத்தினார்.

கர்நாடகத்தில் கிராமப் பகுதிகளில் வசித்து வரும் 70 சத மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வருவாய், ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்துத் துறைகளை அதிகம் சார்ந்துள்ளனர். இவர்களில்  பெரும்பாலானோர் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர்.  ஆனால், விவசாயிகள், கிராமப்புற மக்களின் பிரச்னைகளுக்கு

வருவாய், பஞ்சாயத்துராஜ் துறை உதவி செய்வதில்லை. நிலப் பட்டா மாற்றத்திற்கு பல நாள்கள் காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது. கடந்த அக்டோபர் 31-ஆம் தேதி வரையில் நிலப் பட்டா மாற்றக் கோரும் 1.25 லட்சம் மனுக்கள் வருவாய் துறையின் பரிசீலனையில் உள்ளன. நிலப் பிரச்னை தொடர்பாக ஏராளமான மனுக்கள் தீர்க்கப்படாமல் உள்ளன. எனவே, விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யு வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

### தொடரும் குளிர்: தில்லிவாசிகள் கடும் அவதி!

தில்லியில் இந்தப் பருவத்தின் மிக அதிகமான குளிர் ஞாயிற்றுக்கிழமை பதிவாகியுள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸாகவும் குறைந்தபட்ச வெப்ப நிலை 4.5 டிகிரி செல்சியஸாகவும் இருந்தன என்று தில்லி வானிலை மையம் தெரிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி வரை பனி மூட்டம் இருந்தது. பின்னர் வெப்பம் சற்றே அதிகரித்த போதிலும், மாலை 4 மணிக்கு மேல் மீண்டும் வெப்பநிலை 4.5 டிகிரி செல்சியஸ் என்ற நிலைக்கு குறைந்தது. இதுவரை குறைந்த அளவு வெப்ப நிலை சராசரியாக 6 டிகிரி செல்ஸியஸ் வரையாக இருந்துவந்தது. இந்த நிலை ஞாயிற்றுக்கிழமை மேலும் குறைந்ததை தொடர்ந்து தில்லிவாசிகள் கடும் குளிரால் அவதிப்பட்டனர். வீடுகள், அலுவலகங்களுக்குள் குளிர்காற்று புகுந்து தாக்கியது. சாலைகளில் வாகனங்களில் செல்வோர் கூடுதல் குளிர் பாதுகாப்பு ஆடைகளை அணிந்து கொண்டு சென்றனர். ரயில்கள் தாமதம்: தில்லி உள்பட வட மாநிலங்களில் குளிரால் பனி மூட்டம் அதிகரித்து வருவதை அடுத்து, ஞாயிற்றுக்கிழமையும் 12 ரயில்கள் காலதாமதமாக தில்லி வந்து சேர்ந்தன. திங்கள்கிழமை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வானிலை மையம் தெரிவித்திருக்கிறது.

அதிகபட்ச வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொள்முதல் குறைப்பால் சணல் பை தொழில் பாதிப்பு : 'சப்ளை' சரியில்லை என்கிறது மத்திய அரசு



புதுடில்லி: நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில், 40 சதவீதம், சணல் பைகளில் அடைத்து விற்பனை செய்ய வேண்டும் என்ற விதிமுறையை, மத்திய அரசு, 20 சதவீதமாக குறைத்துள்ளது.இதனால், சணல் துறை பாதிக்கப்படும் என, இந்திய சணல் ஆலைகள் கூட்டமைப்பின் (ஐ.ஜே.எம்.ஏ.,), தலைமை இயக்குனர் எஸ். மஜூம்தார் தெரிவித்துள்ளார்.வாழ்வாதாரம்இதுகுறித்து, அவர் மேலும் கூறியதாவது:நாட்டில் உள்ள, 80 சணல் ஆலைகள் மற்றும் அதை சார்ந்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கில், மத்திய அரசு சணல் பை கொள்முதல் கொள்கையை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, உணவு தானியங்கள் மற்றும் சர்க்கரையை அடைப்பதற்கென, இரு வகை சணல் பைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும், வினியோகம் மற்றும் விற்பனைக்கான தலைமை இயக்குனரகம், சணல் ஆலைகளிடம் இருந்து தலா, 50 கிலோ கொள்ளளவு கொண்ட, சணல் பைகளை கொள்முதல் செய்து வருகிறது.

இவற்றை, பொது துறையை சேர்ந்த முகமை அமைப்புகள் வாங்கி, பொது வினி-யோக திட்டத்திற்கான உணவு தானியங்களை அடைத்து வைக்க பயன்படுத்து-கின்றன.

கடந்த, 2010–11ம் நிதியாண்டு வரை, உணவு தானியங்கள், சர்க்கரை ஆகிய-வற்றின் மொத்த உற்பத்திக்கு ஏற்ப, சணல் பைகள் கொள்முதல் செய்யப்பட்-டன.இந்த நடைமுறை, கடந்த, 2011–12ம் நிதியாண்டில் மாற்றப்பட்டது.உணவு தானியங்கள் மற்றும் சர்க்கரைக்கான சணல் பைகளை கொள்முதல் செய்வதற்கான வரம்பு குறைக்கப்பட்டது. 2012–13ம் நிதியாண்டில், சர்க்கரைக்கான சணல் பை கொள்முதல் வரம்பு மட்டும் குறைக்கப்பட்டது.

சர்க்கரை:இதன்படி, உற்பத்தியாகும் உணவு தானியங்களில், 90 சதவீதத்திற்கும், சர்க்கரையில், 40 சதவீதத்திற்கும் சணல் பைகள் கொள்முதல் செய்யப்பட்டன.இந்-நிலையில், மொத்த சர்க்கரை உற்பத்தியில், சணல் கொள்முதலுக்கான அளவு, 40 சதவீதத்தில் இருந்து, 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால், வரும் பரு-வத்தில், சணல் ஆலைகள் கடுமையாக பாதிக்கப்படும்.ஆகவே, முன்பிருந்தபடி, உணவு தானியங்கள், சர்க்கரை ஆகியவற்றின் உற்பத்திக்கேற்ப, 100 சதவீதம் சணல் பைகளை முகமை அமைப்புகள் கொள்முதல் செய்ய வேண்டும் என, அர-சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மஜூம் தார் தெரிவித்தார்.

இதுகுறித்து தேசிய சணல் ஆணையர் சுப்ரதா குப்தா கூறியதாவது:கடந்த இரண்டு ஆண்டுகளாகவே, சணல் பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆலைகள், சணல் பைகளை போதுமான அளவிற்கு சப்ளை செய்யத் தவறியதால், அரசு, அவற்றின் கொள்முதல் வரம்பை குறைத்தது. போட்டிசணல் ஆலைகள், முழுக்க முழுக்க அரசின் கட்டாய சணல் பை கொள்முதலை சார்ந்து உள்ளதால், அவற்றுக்-கிடையே தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான போட்டித் தன்மை குறைவாக உள்ளது. இவ்வாறு குப்தா தெரிவித்தார்.

உறுதி அளிக்க வேண்டும்:அரசு முகமை அமைப்புகளின் சணல் பைகளுக்கான தேவை, கடந்த, 2012–13ம் நிதியாண்டில், 40 சதவீதம் அதிகரித்து, 38 லட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது.ஆனால், 80 சணல் ஆலைகள், மொத்தம், 27 லட்சம் பொதிகள் என்ற அளவிற்கே, சணல் பையை சப்ளை செய்துள்ளன. 2011–12ம்

நிதியாண்டில், சணல் பைகளுக்கான தேவை, 27 லட்சம் பொதிகளாக இருந்-தது.இதையடுத்து, சணல் பை சப்ளைக்கு உறுதி தெரிவிக்கும் திட்டம் அறிமுகப்ப-டுத்தப்பட்டுள்ளது. இதன்படி, சணல் ஆலைகள், சணல் பை சப்ளைக்கு உறுதி அளிக்க வேண்டும். அவ்வாறு, சப்ளை செய்யத் தவறினால், இரண்டு ஆண்டுக-ளுக்கு அந்த ஆலைகளில் இருந்து சணல் பை கொள்முதல் செய்வது நிறுத்தப்படும்.

**ஏலக்காய் விலை குறைவால்விவசாயிகள் வேதனை**



கூடலுார் :ஏலக்காய்க்கு உரிய விலை கிடைக்காததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டம் கூடலுார் சுற்றுப்புற பகுதியில், ஆண்டுக்கு, 100 டன் வரை, ஏலக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது.பதப்படுத்தப்பட்ட, 8 மி.மீ., அளவு ஏலக்காய், முதல் தரமாகவும், அதற்கு கீழ் உள்ளவை, இரண்டாம் தரமா-கவும், கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன், ஏலக்காய் கிலோவுக்கு, 1,600 ரூபாய் வரை விலை கிடைத்தது. தற்போது, கிலோவுக்கு, 500 ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது.கிலோவுக்கு, குறைந்த-பட்சம், 1,000 ரூபாய் விலை கிடைத்தால் மட்டுமே, ஓரளவு லாபம் கிடைக்கும் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏலக்காய் விவசாயி விஜயராகவன் கூறியதாவது:பதப்படுத்தப்பட்ட ஏலக்காயை, பாதுகாப்பாக வைக்க வசதியில்லாததால், உடனே விற்க வேண்டிஉள்ளது. இதனால், அதிக நஷ்டம் ஏற்படுகிறது.பதப்படுத்தப்பட்ட ஏலக்காயை பாதுகாத்து, விற்பனை செய்ய வசதியாக, அனைத்து வசதிகளுடன் கூடிய கிடங்கு அமைக்-

கவும், கூடலூாரில், ஏலக்காய் ஏல விற்பனை மையத்தை அமைக்கவும், அரசு நடவ-டிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**ஜன., 1 முதல் முட்டைக்கு ஒரே விலை : ஒருங்கிணைப்பு குழு தலைவர் தகவல்**



நாமக்கல்: ஜனவரி, 1ம் தேதி முதல், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நிர்ணயிக்கும் விலைக்கே, பண்ணையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும்," என, ஆலோசனை கூட்டத்தில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தலைவர் செல்வராஜ் கூறினார்.

நாமக்கல்லில் கோழிப்பண்ணையாளர்கள் சந்திப்பு ஆலோசனை கூட்டம், நேற்று நடந்தது. இதில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தலைவர் செல்வராஜ் பேசியதாவது: பிற மாநிலங்களில், புதிதாக கோழிப்பண்ணைகள் உருவாகி வருகின்றன. இதனால், தமிழகத்தில் உற்பத்தி செய்யும் முட்டைகளை, தமிழகத்திலேயே, விற்பனை செய்யும் நிலை ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனால், ஜன., 1ம் தேதி முதல், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு நிர்ணயிக்கும் விலைக்கே, பண்ணையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும். குறைத்து விற்பனை செய்யக்கூடாது. அதேபோல், வியாபாரிகளும், குறைந்த விலைக்கு முட்டை வாங்குவதை தவிர்க்க வேண்டும். அவற்றை, பண்ணையாளர்கள் முறையாக பின்பற்றுகின்றனரா என்பதை கண்டறிய, 10 கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. விலை நிர்ணயம் செய்யும்போது, சிறு சிறு பிரச்னைகள் வரத்தான் செய்யும். பண்ணையாளர்கள் ஒற்றுமையாக இருந்து, விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## மீன் விலை உயர்வு

கீழக்கரை: மீன் வரத்து குறைவால், ராமநாதபுரம் மாவட்ட--ம் கீழக்கரை சந்தையில், விலை உயர்ந்துள்ளது. கீழக்கரை, பெரியபட்டினம், முத்துப்பேட்டை, மாயாகுளம், களிமண்குண்டு, ஏர்வாடி பகுதிகளில், மீன்பிடி நடகிறது. சில நாட்களாக, வரத்து குறைவால், வியாபாரிகளிடையே ஏலம் எடுப்பதில், கடும் போட்டி நிலவுகிறது. இதனால், சாதாரண மீன் கூட விலை அதிகரித்துள்ளது.

மீன் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் நேவிஸ் கூறுகையில், கடலில் மழை இல்லாததால் மீன்வளம் குறைந்துள்ளது. சிறிய வகை மீன்களே அதிகம் கிடைக்கிறது. சில நாட்களாக மீனவர்கள், போதிய மீன்கள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர், என்றார்.

விலை, கிலோவில்: கடந்த வாரம் 600க்கு விற்ற சீலா மீன் 700; 120 க்கு விற்ற வில மீன், 140;, 180க்கு விற்ற வால மீன், 220; 160க்கு விற்ற ஊளா 200; 220க்கு விற்ற நண்டு, 280; 120க்கு விற்ற திருக்கை, 160; 30க்கு விற்ற சூடை, 50 ரூபாய்.

## மதுரையில் சாமந்திப்பூ விளைச்சல் அமோகம் !...பூ சாகுபடிவிவசாயிகள் மகிழ்ச்சி



பாலமேடு:மதுரை அலங்காநல்லூர்பகுதியில் சாமந்திப்பூவிளைச்சல் அமோகமாகஉள்ளது. கிலோ ரூ.50 வரைவிலை போவதால் பூ சாகுபடிவிவசாயிகள் மகிழ்ச்சியில்உள்ளனர்.மதுரையில் சில ஆண்டுகளாக மழை பெய்யாததால்விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நீர்நிலைகள் வறண்டன. கிணற்றுப்பாசனத்தில்ஆங்காங்கு சிறிய அளவில்நெல், கரும்பு, வாழை சாகுபடிநடந்தன. மல்லிகை, கனகாம்பரம்,சாமந்திப்பூ வகைகளை விளைவிக்க

தண்ணீர் இன்றி விவசாயிகள்கஷ்டப்பட்டனர். ஒரு சிலர்தண்ணீரை விலைக்கு வாங்கி நாற்றுகளை காப்பாற்றினர்.இந்நிலையில் மதுரையில்செப்டம்பர், நவம்பரில் ஓரளவுமழை பெய்ததால் நீர்நிலைகள்நிரம்பின. வறண்ட கிணற்றுகள்ஊற்றெடுத்தன. இதனால், மீண்டும் பூ சாகுபடியில்விவசாயிகள்ஆர்வம் காட்டினர்.அலங்காநல்லூர் அருகேபாலமேடு, எர்ரம்பட்டி,கோணப்பட்டி, தத்தூர்,கொழிஞ்சிப்பட்டி, உசிலம்பட்டியில் மல்லிகை, கனகாம்பரம்,சாமந்திப்பூக்கள் பயிரிடப்பட்டன. இவைகள், சொட்டு நீர்பாசன முறையில் விளைவிக்கப்படுகின்றன. பூ பயிரிட்டுள்ளவிவசாயிகளுக்கு கையை கடிக்காத வகையில் பலன் கிடைத்துவருகிறது. வறண்டு கிடந்தவயல்களில் பசுமை போர்த்தியது போல் விவசாயப்பணிகள் நடப்பது விவசாயிகளிடம்மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.அதிகளவு லாபம் கிடைக்காவிட்டாலும், நஷ்டம்ஏற்படாமல் லாபம்கிடைக்கிறது.பால்ராஜ் ,விவசாயி, பாலமேடு:சாமந்திப்பூ பலன்கிடைக்க 90 நாட்கள்தேவை. சொட்டு நீர்பாசனம் மூலம் விளைவிக்கப்படுவதால் தண்ணீர் அதிகம் தேவைப்படாது. தண்ணீர் சத்துகுறையாமல் பார்த்துகொண்டால் தொடர்ந்து 60 நாட்களுக்குள் பயன் கிடைக்கும்.ஒரு ஏக்கரில் சாமந்திப்பூ பயிரிட்டுள்ளேன். தினமும் 70கிலோ வரை பூக்கள் கி டைக் கி ற து .அவற்றை மார்க்கெட்டில் விற்கிறேன்.ஒரு கிலோ ரூ.50வரை விலைபோகிறது. தைபிறந்தால் பூக்களின்விலை உயரும் வாய்ப்புள்ளது. நஷ்டம் இல்லாததால் அடுத்தடுத்து சாமந்திப்பூ விளைவிக்கவுள்ளேன்..

**கல்யாணபூசணி பயிரிடுவதில் விவசாயிகள்...ஆர்வம்! திண்டிவனம் பகுதியில் அமோக விளைச்சல்**

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் கல்யாண பூசணிக்காய் பயிர் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திண்டிவனம் அடுத்த நல்லம் பாக்கம், நகர், வடநெற்குணம், ஆலங்குப்பம், ஆலத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் தர்பூசணி, மணிலா, நெல் ஆகியவற்றை அதிகளவில் பயிரிட்டு வந்துள்ளனர். பருவ மழை போதிய அளவு பெய்யாததால் விவசாயிகள் கல்யாண பூசணிக்காய் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

அமாவாசை, வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் ராகு காலங்களில் கோவில்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வாகனங்களுக்கு சுற்றிப் போடுவதற்கு கல்யாண பூசணி பயன்படுத்தப்படுகிறது. இதனால் பூசணிக்காய்கள் தேவை நாளுக்குநாள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இதனால், திண்டிவனம் பகுதி விவசாயிகள் கல்யாண பூசணிக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கல்யாண பூசணிக்காய் பயிரிடுவதற்கு ரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் தேவைப் படுவதில்லை.

இயற்கை உரம் மட்டும் இருந்தால் போதுமானது. இதனால் செலவும் குறைவாக உள்ளது. கிணற்று பாசனத்தில் கிடைக்கும் குறைந்தளவு நீரைக் கொண்டு, வேறு எந்தவிதமான பயிர்களையும் சாகுபடி செய்ய முடியாத நிலை உள்ளது.

இதனால், குறைந்தளவு பாசனத்தில் பயன்தரும் கல்யாண பூசணி பயிர் சாகுபடி செய்வது, விவசாயிகளுக்கு லாபகரமாக உள்ளது. மழை பெய்தாலும் அதிக பாதிப்பு ஏற்படாது. விளைந்த கல்யாண பூசணிக்காய்களை விவசாயிகள் சென்னையில் உள்ள கோயம்பேடு மார்க்கெட்டிற்கு அனுப்பி வந்தனர். அங்கு பூசணிக்காய்க்கு நல்ல வரவேற்பு கிடைத் துள்ளதால், வியாபாரிகள் விவசாய நிலத்திற்கே வந்து கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளிடம் உடனுக்குடன் பணப் பட்டுவாடா செய்து, தங்களது வாகனங்களில் பூசணிக்காய்களை ஏற்றிச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவும் மிச்சமாகியுள்ளது. பல்வேறு வகையிலும், கல்யாண பூசணிக்காய் சாகுபடி விவசாயிகளுகளுக்கு கூடுதல் லாபம் அளிப்பதாக உள்ளது. இதனால் விவசாயிகள் கல்யாண பூசணி சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

**கரும்புக்கு ரூ.4 ஆயிரம் வழங்க இந்திய கம்யூ., கோரிக்கை**

விழுப்புரம்:கரும்பு டன் ஒன்றிற்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என இந்திய கம்யூ., மாவட்ட குழு கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய கம்யூ., மாவட்ட குழுக் கூட்டம், விழுப்புரம் கட்சி அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் குப்புசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சரவணன் வேலை அறிக்கையை முன் மொழிந்து பேசினார். முன்னாள் எம்.பி., அப்பாதுரை சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில், விவசாயிகள் ஆலைக்கு அனுப்பியுள்ள கரும்பிற்கு உடனடியாக பணம் வழங்க வேண்டும். வரும் 2014ம் ஆண்டு
முதல் கரும்பு டன் ஒன்றிற்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும்.
சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 60 வயதிற்கு மேலான விவசாயிகளுக்கு 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட துணை செயலாளர் கோவிந்தராஜ், பொருளாளர் கலியமூர்த்தி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சவுரிராஜன், ராமசாமி, அப்பாவு, டேவிட்குமார் மற்றும் ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விட்டலாபுரத்தில் பண்ணை குட்டை**

திண்டிவனம்:விட்டலாபுரத்தில் பண்ணை குட்டை அமைக்கும் பணியில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

திண்டிவனம் அருகே உள்ள விட்டலாபுரம் ஊராட்சியில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் பணிகள் நடந்து வருகிறது. நீர் நிலைகளை அதிகரிக்க, தரிசு நிலங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு மூலம் விவசாயிகளுக்கு பண்ணை குட்டை அமைத்து தரப்படுகிறது.

இதேபோல், விட்டலாபுரம் அருள் ஜோதி அறக்கட்டளை அறப்பணிக்கு சொந்தமான இடத்தில் பண்ணை குட்டை அமைக்கும் பணியில் பெண்கள் ஈடுபட்டனர்.

**சோகம் : வறட்சியால் மடிந்த பல ஆயிரம் தென்னை மரங்கள் : நிவாரணம் கிடைக்காததால் விவசாயிகள் கடும் விரக்தி**

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், பருவ மழை பொய்த்து, கடும் வறட்சியால், ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் செத்து மடிந்தன. தென்னை பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்காததால், கடும் விரக்தியடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், கருமந்துறை, வீரகனூர், நரசிங்கபுரம், கெங்கவல்லி மற்றும் வாழப்பாடி பகுதிகளில், விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகிறது. விளை நிலத்திலும், வாய்க்கால் கரை,

தனியாக தோப்புகளாகவும், தென்னை பயிர், சாகுபடி செய்து வருகின்றனர். அதன்படி, ஆத்தூர் யூனியனில், 500 ஹெக்டரும், தலைவாசலில், 350 ஹெக்டர், பெத்தநாயக்கன்பாளையம், 1,000 ஹெக்டர், கெங்கவல்லியில், 200 ஹெக்டர் என, மாவட்டம் முழுவதும், 12,000 ஹெக்டருக்கு மேல், தென்னை பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு, 80 முதல், 100 மரங்கள் என, 12 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. ஐந்து முதல், பத்து ஆண்டுக்கு மேல் உள்ள, தென்னை மரங்களில், ஆறு மாதத்துக்கு ஒரு முறை, தலா, 150 முதல், 200 தேங்காய்கள் கிடைக்கும். அதன்படி, பருவ காலத்தில் மட்டும், 18 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில், 50 லட்சம் தேங்காய் இளநீருக்காவும், 1.50 கோடி தேங்காய் சமையலுக்கும், மீதம் உள்ள தேங்காய், எண்ணெய் தயாரிப்பு மற்றும் மருத்துவ பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், தென்னை மரங்களில் இருந்து விழும், தென்னை மட்டைகளை கீற்றாகவும், இளநீர் உடல் குளிர்ச்சிக்காவும், தேங்காய் என, அனைத்தும் பயன்படுகிறது.

இந்நிலையில், இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை இல்லாமல், கடந்தாண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியில், ஆறு, ஏரி, குளம் மற்றும் விவசாய கிணறு உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டது.

அதனால், ஆத்தூர், மஞ்சினி, துலுக்கனூர், வளையமாதேவி, ஈச்சம்பட்டி, மல்லியக்கரை, கீரிப்பட்டி, காட்டுக்கோட்டை, வீரகனூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம் சுற்றுவட்டார பகுதியில், தென்னை மரங்களுக்கு, போதிய தண்ணீர் இல்லாமல், செத்து மடிந்து வருகிறது.

நீர் ஆதாரம் இல்லாததால், தேங்காய் உற்பத்தியும் குறைந்து வருகிறது. இதில், 15 முதல், 20 வயதுடைய தென்னை மரங்கள் செத்து மடிந்ததால், இந்த ஆண்டு, தேங்காய் உற்பத்தி கடுமையாக பாதித்து, தேங்காய் விலை, கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. தென்னை, பாக்கு மரங்கள் செத்து மடிந்ததால், வேளாண்மை, தோட்டக் கலைத் துறை அதிகாரிகளிடம், நிவாரண உதவி கேட்டு, விவசாயிகள் மனு கொடுத்தனர். ஆனால், விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுக்காததால், அவர்கள் கடும் விரக்தியடைந்துள்ளனர்.

ஆத்தூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:
கடந்தாண்டில், பருவ மழையின்றி, கடும் வறட்சி ஏற்பட்டதில், 60 ஆண்டு வரை பலன் தரும் மரங்கள், 15 முதல், 20 வயதில் செத்து மடிந்தது. வேளாண் துறை அதிகாரிகளிடம், வறட்சி நிவாரணம் கேட்டால், தென்னை பயிருக்கு நிவாரணம் வழங்க, அரசு உத்தரவிடவில்லை எனக் கூறினர்.பின், தென்னை விவசாயிகளிடம், நிவாரண உதவிக்கு மனு பெற்றனர். ஆனால், இதுநாள் வரை, விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்காமல், அலைகழிப்பு செய்து வருகின்றனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பனமா வாடல் நோயால் வாழைகள் நாசம் கொளத்தூர் பகுதி விவசாயிகள் விரக்தி**
மேட்டூர்: கொளத்தூர் சுற்று பகுதியில், அறுவடை சமயத்தில் பனமா வாடல் நோய் தாக்குவதால், வாழைகள் கருகுவது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது. கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள பண்ணவாடி, கண்ணாமூச்சி, செட்டியூர், சின்னதண்டா, தார்க்காடு உள்ளிட்ட பகுதிகளில், 500 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். சாகுபடி செய்து, ஒன்பது மாதம் ஆகியுள்ள நிலையில், ஜனவரி மாதம் முதல் வாழைதார்கள் அறுவடைக்கு வரும். ஆனால், ஏழு மாதம் வாழை மரங்கள் நன்றாக வளர்ந்த நிலையில், அறுவடை சமயத்தில் வாழையில் பனமா வாடல் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக செவ்வாழை, ரஸ்தாளி போன்ற வாழைகளையே பனமா வாடல்நோய் அதிகமாக தக்கும். இந்நிலையில், நடப்பாண்டு அதிக அளவில் சாகுபடி செய்துள்ள, கதலி வாழைகளை பனமா வாடல் நோய் தாக்கியுள்ளது.
நோய் தாக்கிய வாழைகளில் முதல்கட்டமாக இலைகள் மஞ்சள் நிறமாக மாறி விடும். நோய் தீவிரமடையும்போது, வாழை முழுவதுவே காய்ந்து கருகி விடும். பனமா நோய் தாக்கிய பின், வாழை மரங்களை பாதுகாப்பது மிகவும் சிரமமாகும். கொளத்தூர் பகுதியில் பரவலாக வாழைகளில் பனமா வாடல் நோய் தாக்கியுள்ளது. இதனால், சாகுபடி செய்த அனைத்து வாழைகளும் ஒரே நேரத்தில் கருகுவதால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து கொளத்தூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் நாகலிங்கம் கூறியதாவது: பனமா வாடல் நோய் புசோரியம் எனும் பூஞ்சானத்தால் ஏற்படுகிறது. சாகுபடி செய்த வாழைகளில், ஒரு மரத்தில் பனமா நோய் அறிகுறி தென்பட்டவுடன், ஒரு லிட்டர் நீரில், 200 மி.லி., கார்பண்டசிம் பூஞ்சான் மருந்தை இன்ஜெக்டர் மூலம் ஒரு வாழையில், 10 மி.லி., வீதம் ஒரு வார இடைவெளியில் இருமுறை செலுத்த வேண்டும். இதன்மூலம் இதர வாழைகளை நோய் தாக்காமல் கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பா பட்ட நெல்லில் குலைநோய் தாக்க வாய்ப்பு: முன்னெச்சரிக்கைக்கு அறிவுரை**

ப.வேலூர்: "சம்பா பட்ட நெல்லில், குலைநோய் தாக்க வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என, கபிலர்மலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கபிலர்மலை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பட்ட நெல் வளர்ச்சி, பூ மற்றும் கதிர் நிலையில் உள்ளது. தற்போது, டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், கடும் பனிப்பொழிவு, இரவு நேரங்களில் அவ்வப்போது நிகழ வாய்ப்புள்ளது. இந்த குளிர் தட்பவெப்பத்தால், நெல்லில் குலைநோய் தாக்க வாய்ப்புள்ளது. சிறிய கண்வடிவப் புள்ளிகள் நடுவில் சாம்பல் நிறத்துடனும், ஓரத்தில் பழுப்பு கலந்த மஞ்சள் நிறத்துடனும், ஓரிரு நாட்களில், வயல் முழுவதும் பரவி, இலை புகைந்தது போல் காணப்படும். கதிரின் அடிப்பகுதியில், புள்ளி உருவாகி, கதிர் ஒடிந்து தொங்கும் நிலை உருவாகும். பிபிடி 5204 என்ற ரக நெல்லில், குலை நோய் தாக்க அதிக வாய்ப்புள்ளது. விவசாயிகள், காலை நேரங்களில், வயலை நன்கு கவனித்து, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். குலைநோய் அறிகுறி, முதலில் கரும்பச்சையாகி பயிர் வளர்ந்துள்ள பகுதியில் தென்படும். நிழல்பகுதி, தென்னை மரத்தின் அடியில் உள்ள நெல் வயலில் முதலில் தென்படும். அதிக தழைச்சத்து இடுவதை தவிர்த்து, மூன்று முறையாக பிரித்து, யூரியாவை, பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப இடவேண்டும். வயல், வரப்புகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நோயின் தாக்கம் தென்பட்டால், கார்பன்டாசிம், 200 கிராம் ஏக்கருக்கு என்ற அளவில், அல்லது,

கிட்டாசின், 200 மி.லி., ஏக்கருக்கு என்ற அளவில், சூடோமோனாஸ் புளுரோசன்ஸ், 400 கிராம் என்ற அளவில், ஏதாவது ஒரு மருந்தை, 15 நாள் இடைவெளியில், இருமுறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.
மேலும், விபரங்களுக்கு, வட்டார வேளாண் விரிவாக்க மைய அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் அறுவடைக்கு விவசாயிகள் ஆயத்தம்விலை குறைவால் விவசாயிகள் கவலை**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில், மஞ்சள் அறுவடைக்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். மஞ்சள் விலை குவிண்டால், 6,000 ரூபாய்க்குள் இருப்பது, விவசாயிகளுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது.பவானிசாகர் அணையில் இருந்து, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில், முதல் போகத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.
மொத்தமுள்ள, 24 ஆயிரம் ஏக்கரில், வழக்கம்போல, நெல் அதிகளவில் பயிரிடப்பட்டு, அறுவடை பணி முடிந்துள்ளது. அடுத்து கரும்பு, மஞ்சள், வாழை ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், வாய்க்கால் பாசனம் இல்லாத கிணற்று பாசன பகுதிகளில் இரண்டாம் நம்பர், நாட்டு மஞ்சள் மற்றும் ஒரிசா மஞ்சள் விதைகள் பயிரிடப்படுகிறது.
பாசனப்பகுதிகளில் பெரும்பாலும் டி.டி.எஸ்., 8, டி.டி.எஸ்., 10, ஈரோடு விரலி, பி.எல்.ஆர்., 2 ஆகிய ரக மஞ்சள் பயிரிடப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன முதல் போகத்தில் இவ்வகையான மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது.கடந்த, இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை விவசாயிகள் எதிர்பார்த்தைவிட, குறைவாக விலைபோகிறது.
இதனால், மஞ்சள் பயிரிடுவதில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்துள்ளது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் மஞ்சள் பரப்பரளவு, 200 ஏக்கருக்கு குறைவாக காணப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட மஞ்சள் அறுவடை செய்வதற்கான ஆயத்த பணியாக, தோகை அறுக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.கடந்த, இரண்டு ஆண்டாக மஞ்சள் விலை குவிண்டால், 5,200 ரூபாயில் இருந்து, 6,000 ரூபாய்க்குள்

இருக்கிறது. விலைவாசி உயர்வு, முட்டுக்கூலி உயர்வு போன்ற காரணத்தால், விலை போதியதாக இல்லை. அடுத்த ஆண்டு துவக்கத்தில் மஞ்சள் சீஸன் துவங்கி விடும் என்பதால், மஞ்சள் விலை மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் கூறியதாவது:கடந்த, மூன்று ஆண்டாக மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு, விலை, 6,000 ரூபாயை தொடுவதோடு, பெரிய அளவில் உயரவில்லை. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசன பகுதிகளில், மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்து விட்டது.கோபி கோட்டத்தில், கடந்த காலங்களில், 1,300 ஹெக்டேர் மஞ்சள் பயிரிடப்பட்டது. நடப்பாண்டு, 200 ஹெக்டேர் குறைவாக மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. ஜூன், 15 முதல் ஆகஸ்ட், 15ம் தேதி வரை, மஞ்சள் பயிரிடும் பருவம். எல்.பி.பி., வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும்போது, எல்.பி.பி., வாய்க்கால் பாசன பகுதியில் மஞ்சள் பயிரிடப்படும். மஞ்சள் பயிரில் நுண்ணூட்ட சத்து குறைந்து காணப்படுகிறது. நூண்ணூட்ட சத்து குறைவால், மஞ்சள் மகசூல் குறைந்துள்ளது. மஞ்சள் மகசூல் குறைந்தபோதிலும், விலை உயராமல் சராசரியாக குவிண்டால், 5,000 முதல், 6,000 ரூபாய்க்குள் விற்பனையாகிறது.வரும் ஜனவரி மாதத்துக்கு பின், விலை உயர வாய்ப்பு இல்லாததால், மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு, பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உள்ளது, என்றார்.

**வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்: ரூ.53.35 லட்சம் "ஒதுக்கீடு'**

கரூர்: "வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்துக்கு, 53.35 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா, 771 மெ.டன், டி.ஏ.பி., 482 மெ.டன், பொட்டாஷ், 692 மெ.டன், கலப்பு உரம், 1,148 மெ.டன் உரங்கள் இருப்பில் உள்ளது. நடப்பாண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், 629 ஹெக்டேரில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் மலர்கள், 50 சதவீத மானியத்தில் 1,190 விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுண்ணீர் பாசன இயக்கத் திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க, 198 பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மூலிகைப் பயிர் சாகுபடி இயக்கத் திட்டத்தில், 10 ஹெக்டேரில் காந்தல் மலர் சாகுபடிக்கு, 50 சதவீத மானியத் தொகையான, 6.88 லட்சம் ரூபாய், 7.50 ஹெக்டேரில் கூர்க்கன் மூலிகை பயிர் சாகுபடி செய்ததற்கு, 20 சதவீத மானியத் தொகையான, 6.47 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்துக்கு, 53.35 லட்சம் ரூபாய் நிதி பெறப்பட்டு, 50 சதவீத மானியத்தில் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மினிடிராக்டர் உள்ளிட்ட வேளாண் கருவிகள், 8.78 லட்சம் ரூபாய் மானிய விலையில், 27 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தக்காளியிலிருந்து உணவு பொருள் புதிய தொழிற்சாலைக்கு மானியம்**

திண்டுக்கல்:தக்காளியிலிருந்து "சாஸ்,' "ஜெல்லி,' "கெட்செப்,' "ப்யூரி' பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளை துவக்க முன்வருபவர்களுக்கு 25 சதவீதம் மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய உணவு பதப்படுத்தும் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள், தொழில் முனைவோருக்கான பயிற்சி முகாம், திண்டுக்கல்லில் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) செல்வராஜ், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் சாலிகா, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் கந்தசாமி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சஞ்சீவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) கார்த்திகேயன், திண்டுக்கல் விற்பனைக் குழு செயலாளர் சையது இப்ராஹிம் பேசினர். திண்டுக்கல் மாவட்டத்தில் தக்காளி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தக்காளியிலிருந்து "சாஸ்,' "ஜெல்லி,' "கெட்செப்,' "ப்யூரி' பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளை துவக்க முன்வருபவர்களுக்கு 25 சதவீதம் மானியம் வழங்கப்படுமென தெரிவிக்கப்

பட்டது. சிறுதானியங்கள், பழங்கள், பயறுவகைகளில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பட்டியல் தொழில் முனைவோருக்கு அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் ஜெயக் குமார், சவுந்தர்ராஜ், நாகராஜன் செய்திருந்தனர்.

**ஆரஞ்சுபழ சீசன் துவக்கம்**

கொடைக்கானல்:கொடைக்கானலில் ஆரஞ்சு பழ சீசன் துவங்கியுள்ளது. வரும் தை மாதக் கடைசிவரை, ஆரஞ்சு பழங்கள் அதிகளவில் விற்பனைக்கு வரும். தற்போது அடுக்கம், பேத்துப்பாறை, மச்சூர் ஆகிய பகுதிகளில், உள்ள தோட்டங்களில் ஆரஞ்சு பழங்கள் அதிகளவில் காய்த்துள்ளன.

இதனால் கொடைக்கானல்- வத்தலக்குண்டு, பழநி ஆகிய ரோடுகளில் திடீர் பழக்கடைகள் முளைத்துள்ளன. இது குறித்து விவசாயி முத்து கூறியதாவது: ஆரஞ்சு பழங்களை மொத்த வியாபாரிகளிடம் விற்றால், கிலோவிற்கு 20 ரூபாய்தான் கிடைக்கும். அதனால், நாங்கள் வசிக்கும் தோட்டங்களுக்கு அருகில், நெடுஞ்சாலையில் கூடைகளில் வைத்து பழங்களை விற்பனை செய்கிறோம். அன்றாடம் மரங்களில் பறித்த பழங்களை சுற்றுலாப்பயணிகள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தரத்தைப் பொறுத்து கிலோ 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம், என்றார்.

**தரமற்ற நெல் விதைகள் விற்றால் நடவடிக்கை**

ராமநாதபுரம்:"தரமற்ற, நெல்விதைகளை விற்கும் விதை விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்படும்' என, விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் எச்சரித்துள்ளார்.

அவர் கூறியதாவது: பரமக்குடி தாலுகா பகுதிகளில் உள்ள விதை விற்பனை மையங்களில், நெல் விதைகளை முளைப்புதிறன் பரிசோதனைக்காக, விதை ஆய்வாளரால் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரமக்குடி விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில், ஜே.ஜி.எல்-1798 நெல் விதைகள், 80 சதவீதம் முளைப்பு திறன் இருக்க வேண்டும். ஆனால், 57 சதவீதமே இருந்தது. விதை விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது , என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பவானிசாகருக்கு நீர் திறக்க உத்தரவிட வேண்டும்



ஈரோடு : பவானிசாகர் அணைக்கு நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் திட்ட அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வழக்கு தொடர்ந்துள்ளது.ஈரோடு மாவட்ட விவசாயத்துக்கு பிரதானமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி உயரம் கொண்ட இந்த அணையில் 32 டிஎம்சி வரையில் நீரை சேமித்து வைக்கலாம். இந்த ஆண்டில் ஓரளவு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பெய்ததால் கீழ்பவானியில் நன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கும், தடப்பள்ளி- அரக்கன்கோட்டையில் 15000 ஏக்கர் மற்றும் காலிங்கராயன் பாசனத்துக்குட்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட்டு சம்பா சாகுபடி தீவிரமாக நடைபெற்று வருகிறது.இந்நிலையில் அடுத்து வரும் தாளடி பருவத்திற்கு தண்ணீர் திறக்க முடியாத அளவிற்கு தற்போது பவானிசாகர் அணையின் நீர்வரத்து குறைந்துள்ளதால் கீழ்பவானி பாசனத்துக்கு அடுத்து வரும் புன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கும் இந்த ஆண்டு தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 56.70 அடியாக இருந்தது. வெறும் 311 கனஅடி மட்டுமே நீர்வரத்து இருந்த நிலையில் அணையில் இருந்து ஆற்றின் வழியே தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனத்துக்கு 1150 கனஅடியும், கீழ்பவானி

பாசனத்துக்கு வாய்க்கால் வழியே 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது.இதுகுறித்து கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், செயலாளர் வடிவேல், பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் கூறியதாவது: ஓராண்டுக்கும் மேலாக வறட்சியின் கோரப்பிடியில் இருக்கும் நடப்பாண் டின் புன்செய் நிலங்களுக்கு கட்டாயம் தண்ணீர் திறந்தாக வேண்டும். அப்போது தான் கரும்பு, மஞ்சள், வாழை போன்ற நீண்ட கால பயிர்களை காப்பாற்ற முடியும். மேலும், நிலக்கடலை, எள், ஆமணக்கு, மக்காச்சோளம், சோளம், ராகி, கம்பு போன்ற புன்செய் பயிர்களை சாகுபடி செய்ய இயலும். தற்போது அணையின் நீர்இருப்பு உயிர் தண்ணீர் திறந்துள்ளதால் ஜனவரி 9ம் தேதிக்கு பிறகு வெகுவாக குறைந்து விடும். எனவே அடுத்து வரும் புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் தேவையெனில் நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர்மின் அணைகளில் இருந்து தான் தண்ணீர் பெற்று பாசனத்துக்கு திறந்தாக வேண்டும். எனவே நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் திட்ட அணைகளில் இருந்து பவானிசாகர் அணைக்கு தண்ணீர் திறக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள் ளோம்

**மேட்டூர் நீர்மட்டம் 69 அடி**



மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69.37 அடியாக சரிந்துள்ளது.மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவை விட, காவிரி டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக உள்ளதால் நீர்மட்டம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 70.24 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 69.37 அடியாக சரிந்தது.அணைக்கு விநாடிக்கு 933 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 9,410 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 32.16 டிஎம்சி.

**புதுவையில் கரும்பு டன்னுக்கு ரூ.2,450 நிர்ணயம்**

புதுச்சேரி: புதுவையில் கரும்பு விலையை நிர்ணயிக்க முதல்வர் ரங்கசாமி தலைமையில் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் 2012-2013 ஆண்டுக்கான கரும்பு விலை டன்னுக்கு ரூ.2,450 ஆக நிர்ணம் செய்யப்பபட்டுள்ளது. முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கு பினட புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் இத்தகவலை தெரிவித்துள்ளார். 2012-2013-ல் கொள்முதல் செய்த 1.5 லட்சம் டன் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2013-2014-ம் ஆண்டு கொள்முதல் செய்யப்படும் கரும்புக்கு முன்தொகை ரூ.2,450 தரப்படும் என அறிவித்துள்ளனர். நடப்பு ஆண்டுக்கான கரும்பு விலை அடுத்த முத்தரப்பு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார். நடப்பு ஆண்டில் 2.5 லட்சம் டன் கரும்புகள் அரவை நாளை தொடங்கும் எனவும் தகவல் தெரிவித்துள்ளார்.

**வத்தல் விலை ரூ.200 சரிவு பாமாயில் டின்னுக்கு ரூ.10 உயர்வு**

விருதுநகர்:ஆந்திரா குண்டூர் மார்க்கெட்டிற்கு புதுவத்தல் தினசரி வரத்து 10 ஆயிரம் மூட்டையாக உள்ளது. சாதாரண 334 ரக வத்தல் குவிண்டால் ரூ.6,400 முதல் ரூ.6,600 வரையும், தேஜா வத்தல் குவிண்டால் ரூ.11,000 முதல் ரூ.12,000 வரையும், ஜிடி வத்தல் குவிண்டால் ரூ.9,000 முதல் ரூ.10,000 வரை உள்ளது.

புதுவத்தல்களில் தேஜா, ஜிடி ரகவத்தல் நல்ல நிறத்துடன் காரம் அதிகம் இருக்கும் என்பதால் மசாலா தயாரிப்பு நிறுவனங்கள் போட்டி, போட்டு வாங்கி வருகின்றன.

இந்நிலையில் புதுவத்தல் வரத்து துவங்கியதை தொடர்ந்து இருப்பில் இருந்த ஏசி வத்தல் குவிண்டால் ரூ.4,700 முதல் ரூ.7,200 வரை விற்றது ரூ.200 சரிந்து ரூ.4,500 முதல் ரூ.7,000 வரை விற்பனையாகிறது.

டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவால் பாமாயில் (15 கிலோ) டின் ரூ.980 லிருந்து ரூ.990 என உயர்ந்துள்ளது.

**கோமாரி நோய் பரவியதால் மூடப்பட்ட 73 மாட்டு சந்தைகளை திறக்க முடிவு**



கோவை: தமிழகத்தில் கோமாரி நோய் பரவியதால் மூடப்பட்ட 73 மாட்டு சந்தைகளை திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, துடியலூர், உடுமலை, ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் உட்பட மாநில அளவில் 73 மாட்டு சந்தைகள் செயல்பட்டு வந்தது. இந்த சந்தைகளின் மூலமாக தினமும் சுமார் 40 ஆயிரம் மாடுகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து தினமும் சுமார் 25 ஆயிரம் மாடுகள் விற்பனைக்காக தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டது. கடந்த சில மாதங்களாக மாநில
அளவில் கோமாரி நோய் பரவியதால் பல ஆயிரம் மாடுகள் பாதிக்கப்பட்டன.

மாநில அளவில் சுமார் 5 ஆயிரம் மாடுகள் இறந்தன. நாகப்பட்டணம், கன்னியாகுமரி, நாகர்கோயில், திருப்பூர், ஈரோடு மாவட்டத்தில் மாடுகள் அதிகளவு இறந்து விட்டன.

நோய் பரவலை தடுக்க, மாநில அளவில் அனைத்து மாட்டு சந்தைகளும் கடந்த

நவம்பர் மாதத்தில் இருந்து மூடப்பட்டது. இதனால் மாட்டு வியாபாரம் முடங்கியது. இறைச்சிக்காக மாடுகள் கிடைக்காத நிலை ஏற்பட்டது. கோவை மாவட்டத்தில் இருந்து கேரளாவிற்கு தினமும் 10 ஆயிரம் மாடுகள் இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்டன.

மாட்டுசந்தை மூடப்பட்டதால் கேரளாவுக்கு மாடுகள் அனுப்புவது நிறுத்தப்பட்டது. மாட்டு வியாபாரத்தை நம்பியிருந்த பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்து தவித்து வந்தனர். கோமாரி நோய் கட்டுபாட்டிற்குள் வந்ததால் மாட்டு சந்தைகளை மீண்டும் திறக்க கோரிக்கை விடப்பட்டு வந்தது.

மாட்டு சந்தைகளை திறப்பது தொடர்பாக கால்நடை பராமரிப்பு துறையினர் சென்னையில் ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இதில் ஜனவரி இரண்டாவது வாரம் மாட்டு சந்தைகளை திறக்க அனுமதி வழங்கலாம் என முடிவு எடுக்கப்பட்டது. மாட்டு சந்தைகள் திறந்தால், மாடுகளின் வரத்து, நோய் பாதிப்பு போன்றவற்றை கால்நடை பல்கலைக்கழக டாக்டர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை டாக்டர்கள் கண்டறியவேண்டும். நோய் பாதிப்புள்ள மாடுகளை வெளி மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்குள் கொண்டு வர அனுமதிக்கக் கூடாது. மாநில எல்லை செக்போஸ்ட்களில் மாடுகளின் நோய் பாதிப்பு தன்மையை அறிய வேண்டும். நோய் பாதித்த மாடுகளை திருப்பி அனுப்பி விடவேண்டும் என அனைத்து மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கோமாரி நோய் முற்றிலும் கட்டுபாட்டிற்குள் வந்து விட்டது. நோய் பரவ மோசமான காலநிலை தான் காரணம். குளிரும், மழையும்  கலந்த சீதோஷ்ண நிலை, முறையற்ற பராமரிப்பு காரணமாகவே கோமாரி நோய்

பரவியது. தடுப்பூசி மற்றும் மாட்டு தொழுவம் பராமரிப்பு பணி காரணமாக இந்த நோய் கட்டுபாட்டிற்குள் வந்து விட்டது என கால்நடை பராமரிப்பு துறையினர் தெரிவித்தனர்.

**நெற்பயிரில் குலைநோய், செவட்டை நோயை கட்டுப்படுத்த ஆலோசனை**

செம்பட்டி: நெற் பயிர்களில் குலைநோய் மற்றும் செவட்டை நோயை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.
திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது போதிய மழை இல்லாதது மற்றும் தட்ப வெப்பநிலை மாற்றத்தால் பல்வேறு விதமாக நோய்கள் நெற்பயிர்களை தாக்கி வருகின்றன.
இதனால் விளைச்சல் பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது. நெற்பயிர்களில் தற்போது பரவ லாக காணப்படும் குலை நோய் மற்றும் செவட்டை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:
குலைநோய் அனைத்து பயிரின் வளர்ச்சி காலங்களிலும் சேதம் விளைவிக்க கூடியது. நோயுற்ற இலை யின் மேல் சிறிய பழுப்புநிற புள்ளிகள் தெரியும். இவை பெரிதாகும் போது கண் போன்ற வடிவத்துடன் ஓரங்களில் பழுப்பு நிறமாக வும், நடுப்பகுதி சாம்பல் நிறமாகவும் காணப்படும்.
இது பைரிகுலோரியா ஒரைசியா என்ற பூஞ்சாணத்தினால் உண்டாகிறது. இவை காற்றின் மூலமும், நோய் தாக்கிய விதை மற்றும் வைக்கோல் மூலம் பரவும். இதனால் நெற்பயிர் பதராகிவிடும்.
இதனை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கார்பெண்டாசிம், டிரை சைக்ளசோல் அல்லது அசாஸிஸ்ரோபின் இதில் ஏதேனும் ஒரு மருந்தை 200 மில்லி கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.
இயற்கை விவசாயிகள், ஒரு கிலோ சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் பாக்டீரியத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இதனுடன் ரசாயன மருந்து கலக்கக்கூடாது.
இதுபோன்று பாக்டீரி யா இலைக்கருமல் நோய் தாக்கினால், இலை யில் நீண்ட கோடுகளாக அலை போன்ற ஓரங்களுடன் பழுப்பு கலந்த மஞ்சள் நிறம் போன்று தெரியும். இதனை கட்டுப்படுத்த நோய் தென்பட்டவுடன் தழைச்சத்து அதிகமாக இடு வதை தவிர்க்க வேண்டும். 20 சதவீதம் பசுஞ்சான கரைசலை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் அல்லது

ஸ்டெரெப்மாமைசின் சல்பேட், டெட்ராசைக்கிளின் 120 கிராம் உடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் கலவையை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். செவட்டை நோய் தாக்கினால் இலையின் பின்புறம் சாம்பல் படர்ந்து காணப்படும். இலைகள் வெளுத்து மஞ்சள் நிறமாக இருக்கும். இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருடன் 2.5 மில்லி டைகோபால் அல்லது 0.6 மில்லி ஓபிரான் கலந்து தெளிக்க வேண்டும்.
யூரியாவை வேப்பம் புண்ணக்குடன் கலந்து தெளிக்க வேண்டும். அதிக அளவில் யூரியா போடக்கூடாது. வயல், வரப்பு ஓரங்களில் இருக்கும் கோரைப்புற்களை அகற்ற வேண்டும். இவ்வாறு வேளாண் அதிகாரிகள் கூறினர்.

**விலை வீழ்ச்சியால் மாடுகளுக்கு உணவாகும் காய்கறிகள்**

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதி யில் தற்போது காய்கறி விலை சரிபாதியாக குறைந்துள்ளது. இதனால் கடைகளில் காய்கறி வாங்குவதற்கு கூட்டம் அதிக மாக காணப்படுகிறது. ஐயப்ப பக்தர்கள், பழனி, ஆதிபராசக்தி கோயில்களுக்கு மாலை அணிவிக்கும் இந்த வேலையில் காய்கறி விலைகள் உயர்ந்து விற்பனையாகும். ஆனால் அதற்கு நேர்மாறாக காய்கறி விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது முள்ளங்கி, கத்தரிக்காய், பீட்ரூட், தக்காளி, கேரட், பீன்ஸ், சேனை, முட்டைக்கோஸ், பச்சைமிளகாய், காலிபிளவர் கிலோ ரூ.15க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் கடைகளில் மக்கள் போட்டிபோட்டு காய்கறி வாங்குகின்றனர். விலை குறைவால் டன் கணக்கில் காய்கறி விற்பனையாகிறது. காய்கறிகளை பொதுமக்கள் மூட்டை மூட்டை யாக வாங்கிச் சென்று மாடுகளுக்கு உணவாக வைக்கின்றனர். தற்போது வேதாரண்யத்தில் எள்ளு புண்ணாக்கு கிலோ ரூ.32, கடலை புண்ணாக்கு ரூ.45, பருத்தி கொட்டை ரூ.47, உளுத்தம் பொட்டு ரூ.25, மாட்டு தீவனம் ரூ.18, வைக்கோல் ஒரு கட்டு ரூ.100க்கு விற்பனையாகிறது. மாட்டு தீவனங்களின் விலைகளை ஒப்பிடும்போது காய்கறிகளை வாங்கி மாட்டுக்கு வைத் தால் செலவு குறைவாகிறது. காய்கறி விலை குறைவால் கிராமங்களில் இருந்து மக்கள் அதிகளவில் வேதாரண்யத்திற்கு வந்து காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

**செங்கரும்பு விளைச்சல் பாதிப்பு**

சிவகாசி: பொங்கலு க¢கு தேவையான செங் கரும்பு அறுவடைக¢கு தயார் நிலையில் உள்ளது. இந்தாண்டு போதிய மழை இல்லாததால் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. சிவகாசி தாலுகா எ£¤ச்சநத்தம், முருகனேரி கிராமத்தில், விவசாயிகள் 100 ஏக¢கர் பரப்பில் செங் கரும்பு பயிர் செய்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் பயிர் செய்யப்பட்ட கரும்புகள் தற்போது 5 முதல் 6 அடி வரை வளர்ந்து அறுவடைக¢கு தயார் நிலையில் உள்ளது. கரும்பு நடவு செய்து 10 மாதங்களில் விளைச்சல் அடையும்.

இந்த ஆண்டு பருவ மழை சரவர பெய்ய வில்லை. இதனால் கரும்பு பயிர்களுக¢கு போதிய தண்ணீர் இன்றி விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. முருகனேரி கிராமத்தில் 100 ஏக¢கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர்.

இதில் இரண்டு ஏக¢கரில் மட்டும் நல்ல விளைச்சல் அடைந்து, தை பொங்கலுக்கு தயார் நிலையில் உள்ளது. மற்ற நிலங்களில் 3 முதல் 4 அடி வரையிலே கரும்பு விளைந்துள்ளதால் தை பொங்கலு க¢கு அறுவடை செய்ய முடி யாத நிலையில் உள்ளது. இந்த கரும்புகள் இரண்டு மாதங¢களுக¢கு, பின்னர் கரு ம்பு சாறு தயாரிக¢க பயன் படும். விளைச்சல் பாதிப் பால் விவசாயிகளுக¢கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விவசாயி செந்தில் கூறுகையில், முருகனேரி பகுதியில் 100 ஏக¢கர் பரப்பில் கரும்பு பயிர் செய்யப் பட்டுள்ளது. கரும்பு பயிர் செய்ய ஏக¢கருக¢கு ரூ70 ஆயிரம் வரை செலவாகிறது. கரும்பு நல்ல விளைச்சல் இருந்தால் 15 கரும்பு கொண்ட ஒரு கட்டு ரூ. 300 வரை விலை போகும்.

மழை இல்லாததால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் 100 ஏக¢கர் கரும்பு பய¤ர் செய்துள்ளனர். இதில் 2 ஏக¢கர் கரும்புகள் மட்டுமே தற்போது அறுவடைக¢கு தயார் நிலையில் உள்ளது என்றார்.

**நீர்மட்டம் 41 அடியாக குறைந்ததால் வைகை அணை மூடல்**

மதுரை: நீர்மட்டம் 41 அடியாக குறைந்ததால் வைகை அணை மூடப்பட்டது. இதனால் மதுரை குடிநீர் தேவைக்கு கடும் சிக்கல் உருவாகி உள்ளது. பெரியாறு அணையில் திறக்கப்பட்ட தண்ணீரின் அளவும் பாதியாக குறைக்கப்பட்டுள்ளது. முல்லை பெரியாறு, வைகை அணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க அரசு விதிமுறைகள் உள்ளன. 120 நாள் பாசன தேவைக்கு அணையில் எவ்வளவு தண்ணீர் இருப்பு இருந்தால், எந்த பகுதிகளுக்கு திறக்கலாம் என கணக்கிட்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பொதுப்பணித்துறை பொறியாளர் கணக்கிட்டு, கலெக்டர் அரசுக்கு அனுப்பும் பரிந்துரைப்படி தண்ணீர் திறக்க அரசு உத்தரவிடுகிறது. இதன்படி தண்ணீர் திறக்கும்போது பாசனத்திற்கு எந்த சிக்கலும் ஏற்படாது. விதிமுறைகளை அதிகாரிகள் தூக்கி எறிந்து விட்டு, திறக்கும்போது சிக்கல் ஏற்படும். தற்போது வைகை அணையில் இருந்து ஒரு போக பாசனம் ஒரு லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் திறக்கப்பட்டதில் சிக்கல் எழுந்துள்ளது.
ஒரு போக பாசனத்திற்கு போதிய இருப்பு இல்லாத நிலையிலும் செப்.25ல் மழையை நம்பி வைகை அணை திறக்கப்பட்டது.

மழை ஏமாற்றியதால் பயிர்கள் வாடின. தண்ணீர் திறக்கக் கோரி மேலூரில் விவசாயிகள் நடத்திய மறியல் போராட்டத்தை தொடர்ந்து, கடந்த 23ல் வைகை அணை திறக்கப்பட் டது. வைகையில் தண்ணீர் குறைவாக இருந்ததால், பெரியாறு அணையில் இருந்து 700 கன அடி வீதம் திறக்கப்பட்டது, இது வைகை அணைக்கு வந்து சேருவதற்குள் எதிர்ப்பு தெரிவித்து உத்தமபாளையத்தில் விவசாயிகள் போர்க் கொடி தூக்கி விட்டனர். இதனால் வைகைக்கு கூடுதல் நீர் வந்து சேர வில்லை. கடந்த 23ல் 45 அடியாக இருந்த நீர் மட் டம் நேற்று 41 அடியாக சரிந்தது. இதனால் நேற்று வைகை அணை மூடப்பட் டது. பெரியாரில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் அளவு பாதியாக அதாவது 344 கன அடியாக குறைக்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு பருவத்தில், 3.79 கோடி பொதி பருத்தி உற்பத்தியாகும்**



மும்பை

நடப்பு பருவத்தில் (2013 அக்டோபர்–2014 செப்டம்பர்) பருத்தி உற்பத்தி 3.79 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தி கொண்டதாகும்.

<u>பயிரிடும் பரப்பளவு</u>

சென்ற பருவத்தை காட்டிலும் இப்போது பருத்தி பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ள போதிலும் பருவமழை நன்றாக இருந்ததால் பருத்தி விளைச்சல் அமோகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.79 கோடி பொதியாகவும், பயன்பாடு 3 கோடி பொதியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உபரியாக 1.37 கோடி பொதிகள் இருக்கும் என இந்திய பருத்தி சங்கத்தின் தலைவர் தீரேன் ஷேத் தெரிவித்தார்.


சிறப்பான பருவமழை காரணமாக நடப்பு பருவத்தில் குஜராத் மாநிலத்தில் பருத்தி சாகுபடி பரப்பளவு 10 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த பருவத்தில் அங்கு வறட்சி

நிலவியது. சர்வதேச அளவில் நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி தேவையை காட்டிலும் அதிகமாக இருக்கும். சில நாடுகளில் அறுவடை தாமதமாகும். சர்வதேச பருத்தி உற்பத்தி 12 லட்சம் டன் குறைந்து 2.56 கோடி டன்னாகவும், பயன்பாடு 2 சதவீதம் அதிகரித்து 2.38 கோடி டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2014–15–ஆம் ஆண்டில் பயன்பாடு 3 சதவீதம் அதிகரித்து 2.46 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<u>சீனா, பாகிஸ்தான்</u>

அடுத்து வரும் ஆண்டுகளில் சீனாவில் பருத்தி பயன்பாடு குறையும் என தெரிகிறது. அதே சமயம் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் பருத்தி பயன்பாடு அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் 2013–14–ஆம் ஆண்டில் பயன்பாடு 12 சதவீதம் அதிகரித்து 51 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த நான்கு பருவங்களாக பயன்பாடு சராசரியாக 45 லட்சம் டன்னாக உள்ளது. 2014–15 பருவத்தில் பயன்பாடு நடப்பு பருவத்தை காட்டிலும் 7 சதவீதம் அதிகரித்து 55 லட்சம் டன்னாக உயரும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**விவசாய மற்றும் சில்லறை கடன்களால் வங்கிகள் வழங்கிய கடன் 15.26% உயர்வு**




மும்பை

விவசாயம் மற்றும் சில்லறை கடன் பிரிவுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, டிசம்பர் 13 வரையிலான இரண்டு வாரங்களில் வங்கிகள் வழங்கிய கடன் 15.26 சதவீதம் உயர்ந்து ரூ.55.94 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

உணவு அல்லா கடன்

நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வங்கிகள் வழங்குவது உணவு அல்லா கடன் எனப்படுகிறது. உணவு தானியங்கள் கொள்முதலுக்காக இந்திய உணவு கழகத்திற்கு வழங்கப்படுவது உணவுக் கடன் என்றழைக்கப்படுகிறது. டிசம்பர் 13 வரையிலான 15 தினங்களில் வங்கிகளின் உணவு அல்லா கடன் 15.26 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இது, பாரத ரிசர்வ் வங்கி நடப்பு நிதி ஆண்டுக்கு நிர்ணயித்துள்ள 15 சதவீத வளர்ச்சி இலக்கை காட்டிலும் அதிகமாகும்.

வேளாண் கடன் மற்றும் தனிநபர் கடன் அதிகரித்ததே இதற்கு காரணம் என பேங்க் ஆஃப் இந்தியாவின் தலைவர் வி.ஆர்.ஐயர் தெரிவித்தார். நடைமுறை மூலதன தேவைகளுக்காக நிறுவனங்கள் அதிகம் கடன் வாங்கியுள்ளதாகவும், நடப்பு நிதி ஆண்டில் 16–17 சதவீத கடன் வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ரூபாய் மதிப்பு சரிவால் இந்திய நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல நிறுவனங்கள் வெளிநாட்டுக் கடனை தவிர்த்து உள்நாட்டிலேயே கடன் வாங்கி வருகின்றன. வங்கிகளின் கடன் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. இந்நிலையில், கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் வங்கிகளில் டெபாசிட் 17 சதவீதம் உயர்ந்து ரூ.75.24 லட்சம் கோடியை எட்டியுள்ளது.

சேமிப்பு விகிதம்

எனினும் இதனால் சேமிப்பு அதிகரித்துள்ளது என கருத முடியாது என நிபுணர்கள் தெரிவித்தனர். கடந்த ஆண்டில் பணவீக்கம் அதிகமாக இருந்ததால் சேமிப்பு விகிதம் சரிவடைந்துள்ளது. நடப்பு ஆண்டில், செப்டம்பர் மாதத்திலிருந்து வங்கிகளில் சேமிப்பு அதிகரித்து வந்துள்ளது. ரிசர்வ் வங்கியின் சிறப்பு திட்டம் மூலம் வெளிநாடு வாழ் இந்தியர்கள் தாய் நாட்டிற்கு அதிக தொகை அனுப்பியதே இதற்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

**அதிசய வாழை மரம்**



கோவை மாவட்டம் ஆனைமலை அருகே தென்சங்கம் பாளையம் சமத்துவபுரத்தில் ஈஸ்வரி என்பவரது வீட்டில் உள்ள வாழை மரத்தில் குருத்து வளரும் பகுதியில் அதிசயமாக குலை தள்ளி பூ பூத்துள்ளதுடன் காய்க்கவும் தொடங்கி உள்ளது. இந்த அதிசய வாழை மரத்தை அந்த பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்ற வண்ணம் உள்ளனர்.

**நீலகிரி மாவட்டத்தில் கடும் பனிப்பொழிவு: வன விலங்குகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்**



நீலகிரி மாவட்டத்தில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டு வருவதால் வன விலங்குகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது.

<u>நீலகிரி மாவட்டத்தில் கடுங்குளிர்</u>

நீலகிரி மாவட்டத்தில் தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பெய்து முடிந்ததும், பனிக்காலம் தொடங்குகிறது. தற்போது வடகிழக்கு பருவ மழையும் ஓய்ந்து உள்ளதால் நீலகிரி மாவட்டத்தில் பகலில் கடும் வெயிலும், இரவில் கடுங் குளிரும் நிலவுகிறது.

இந்த குளிர் காரணமாக மாவட்டத்தில் உள்ள தேயிலை செடிகள் கருக தொடங்கி உள்ளன. எனவே விவசாயிகள் பனிப்பொழிவில் இருந்து தேயிலை செடிகளை காப்பற்ற தாவெ எனப்படும் காட்டுச் செடிகளை கொண்டு தேயிலை செடிகளை மூடி வருகின்றனர். இவ்வாறு மூடப்படுவதால் தேயிலை செடிகள் கருகுவது தடுக்கப்படுகிறது என்று விவசாயிகள் தெரிவித்து உள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஊட்டி தலைக்குந்தா பகுதியில் வெப்பநிலை '0'டிகி ரிக்கும் குறைவாக சென்றதால் தண்ணீர் ஐஸ் கட்டிகளாக மாறியது. மேலும் காமராஜ் சாகர் அணைப்பகுதி, பைக்காரா, சூட்டிங்மேடு உள்ளிட்ட பகுதிகளில் வெப்பநிலை மைனஸ் டிகிரிக்கு சென்றதால் சுற்றுலா பயணிகள் அவதி அடைந்தனர்.

பகலில் கடும்பனிப்பொழிவு நிலவுவதால் பச்சை தேயிலை பறிக்க முடியாமல் தேயிலை தொழிலாளர்கள் அவதி அடைந்து உள்ளனர். பச்சை தேயிலை மகசூல் குறைவின் காரணமாக தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலை வரத்தும் குறைந்து உள்ளது.

<u>வன விலங்குகளுக்கு தீவன தட்டுப்பாடு</u>

கூடலூர் பகுதியிலும் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. கூடலூர், நடுவட்டம், டி.ஆர்.பஜார், பைக்காரா பகுதியில் உள்ள பச்சை புல்வெளிகளில் அதிகாலை நேரத்தில் பனிக்கட்டிகள் உறைந்து காணப்படுகிறது. இதே போல் கூடலூர் நடுவட்டம் பகுதியில் உள்ள தேயிலை செடிகள் பனிப்பொழிவு காரணமாக கருக தொடங்கி உள்ளன. இதனால் பச்சை தேயிலை விளைச்சல் பாதிக்கும் சூழல் உருவாகி உள்ளது.

பனியின் காரணமாக வனப் பகுதிகளில் புல்வெளிகள் கருகி வருவதால் வனவிலங்குகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இடைப்பட்ட காலத்தில் மழை பெய்தால் பனிப்பொழிவின் தாக்கம் குறையும் என விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

**வாழை விவசாயத்தில் ஆர்வம் காட்டும் பந்தலூர் விவசாயிகள்**



பந்தலூர்,

வாழைக்கு அதிக விலை கிடைப்பதால் பந்தலூர் விவசாயிகள் வாழை விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

**காபி அறுவடை சீசன் தொடக்கம்**

பந்தலூர் தாலுகா பகுதியில் தேயிலை, காபி, குறுமிளகு, இஞ்சி உள்ளிட்ட பயிர்கள் நன்கு விளைகிறது. இந்த நிலையில் தேயிலைக்கு போதிய விலை கிடைக்காமல் உள்ள தால் வேறு பயிர்களை நடுவதில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். தற்போது காபிஅறு வடை சீசன் தொடங்கி உள்ளது. தேயிலையை விட காபி பயிருக்கு நிரந்தரமான விலை கிடைத்து வருகிறது.

குறிப்பிட்ட பயிர்கள் சீசனுக்கு மட்டுமே விளைகிறது. ஆனால் ஆண்டு முழுவதும் வாழை பயிரிடுவதற்கானகால நிலை கூடலூர், பந்தலூர்பகுதியில் நிலவுவதால் நேந்திரன், நாழிபூவன் உள்ளிட்ட வாழைகள் ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்டு வருகிறது. இதற்கு ஏற்ப தற்போது வாழைக்கு நல்ல விலையும் கிடைத்து வருகிறது. **விளைச்சல் அதிகரிப்பு**

பந்தலூர் தாலுகா அய்யங் கொல்லி, அத்திச்சால், காரக் கொல்லி, படச்சேரி உள்ளிட்ட வயல் பகுதிகளில் நெல்,காய்கறி உள்பட பல விவசாயங்கள்நடை பெறுகிறது. இதேபோல் வாழை விவசாயமும் களை கட்டி உள்ளது.

கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யாமல் போனதால் வாழைப்பழங்களின் விலை ஏற்றம் கண்டது. ஆனால் நடப்பு ஆண்டில் பருவமழை நன்றாக பெய்து உள்ளதால் விவசாய பணிகளும் வேகமாக நடைபெற்று வருகிறது.

குறிப்பாக வாழை விவசாயம் முக்கிய இடத்தை பிடித்து உள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் வாழைத்தார்களின் விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வாழைப்பழங்களின் விலையும் குறையும் என கருதப்படுகிறது.

**சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே.கூட்டுறவு ஆலைக்கு கரும்பு வெட்டும் இயந்திரம் கரும்புகள் வெட்டும் பணி தொடங்கியது**



நாள் ஒன்றுக்கு 100 டன் வெட்டப்படும் என தலைமை கரும்பு அலுவலர் தகவல்

சேத்தியாத்தோப்பு,டிச.28– சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே.கூட்டுறவு ஆலைக்கு விவசாயிகள் கோரிக்கை ஏற்று கரும்பு வெட்டும் இயந்திரம் வரவழைக்கப்பட்டு கரும்புகள் வெட்டும் பணி தொடங்கியது. நாள் ஒன்றுக்கு 100 டன் வெட்டப்படும் என தலைமை கரும்பு அலுவலர் தெரிவத்துள்ளார்.

கரும்பு வெட்டும் இயந்திரம் சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2013–14–ம் ஆண்டிற்கான அரவை பருவத்திற்காக சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 3 லட்சம் டன் கரும்பு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, பயிர் செய்யப்பட்ட கரும்புகள் வெட்டுவதற்கு தயாராக உள்ளது. பயிர் செய்த கரும்புகளை ஆண்டுதோறும் கரும்பு விவசாயிகள் வெட்டுவதற்கு ஆட்கள்

பற்றாக்குறை, வெட்டுக்கூலி போன்ற காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு கரும்பு விவசாயம் செய்ய தயங்கி வந்தனர். மேலும், இதுகுறித்து, ஆட்கள் பற்றாக்குறை, வெட்டுக்கூலி அதிகமாக இருந்த காரணத்தால் கரும்பு விவசாயிகள் ஆலை நிர்வாகத்திடம் பயிர் செய்ய கரும்புகளை வெட்டுவதற்கு கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்கவேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்திருந்தனர். இக்கோரிக்கையை ஏற்ற ஆலை நிர்வாகம் தற்போது நடப்பு ஆண்டில் பயிர் செய்யப்பட்ட கரும்புகளை வெட்டுவதற்காக கரும்பு வெட்டும் இயந்திரத்தை ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. <u>கரும்புகள் வெட்டும் பணி தொடங்கியது</u>

அதையடுத்து, கரும்பு வெட்டும் இயந்திரம் ஆலைக்கு வரவழைக்கப்பட்டு முதற்கட்டமாக அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் பகுதியில் கானூர் பாலசுந்தரம் என்பவரது வயலில் சர்க்கரை ஆலை தலைமை கரும்பு அலுவலர் முருகன் தலைமையில் கரும்பு வெட்டும் இயந்திரம் மூலம் கரும்புகளை வெட்டப்பட்டது. குரும்பு வெட்டும் இயந்திரம் செயல்பாடுகளை அறிந்து கொள்ளும் விதமாக ஸ்ரீமுஷ்ணம், ஆண்டிமடம், ஓலையூர், ராஜேந்திரபட்டிணம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கரும்பு விவசாயிகள் வரவழைக்கப்பட்டு கரும்பு வெட்டும் இயந்திரம் மூலம் கரும்பு வெட்டுவது குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இதுகுறித்து தலைமை கரும்பு அலுவலர் முருகன் கூறுகையில்:–

கரும்பு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை தற்போது ஏற்கப்பட்டு கரும்பு வெட்டும் இயந்திரம் வரவழைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 100 டன் கரும்புகள் வெட்ட முடியும். மேலும், வெட்டிய கரும்புகளை உடன் இறக்குவதற்கு ஆலையில் ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளது. எனவே, கரும்புகள் வெட்ட ஆட்கள் பற்றாக்குறை, வெட்டுக்கூலி போன்ற பிரச்சினைகள் இனிமேல் விவசாயிகளுக்கு நீங்கும். எனவே, நடப்பாண்டில் கரும்பு விவசாயிகள் அனைவரும் அதிக அளவில் கரும்புகளை பயிர் செய்யவேண்டும் என விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**மணிமுக்தா அணை நிரம்பாததால் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிப்பு**



கள்ளக்குறிச்சி,

மணிமுக்தா அணையில் தண்ணீர் நிரம்பாததால் கள்ளக்குறிச்சி பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>மழை ஏமாற்றம்</u>

விழுப்புரம் மாவட்டத்தின் முக்கிய அணைகளாக கோமுகி, மணிமுக்தா அணைகள் உள்ளது. இதன் மூலம் கள்ளக்குறிச்சி பகுதியில் 16 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறுகிறது.

கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யாததால் அணைகளில் இருந்து குறைந்த நாட்களுக்கே விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் கடைமடை பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

<u>21.30 அடி நீர்மட்டம்</u>

இந்த ஆண்டு நல்ல மழை பெய்யும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் கடந்த ஆண்டை போல் மழை ஏமாற்றிவிட்டது. இதனால் கோமுகி அணை, மணிமுக்தா அணைகள் நிரம்பவில்லை.

மணிமுக்தா அணையில் வாய்க்காலை திறக்க குறைந்த பட்சம் 23 அடியாக நீர்மட்டம் இருக்கவேண்டும். ஆனால் அணையின் நீர் மட்டம் 21.30 அடியாக உள்ளது. எனவே இந்த ஆண்டு விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது சந்தேகம் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயம் பாதிப்பு

இதனால் அணை பாசனத்தை நம்பியுள்ள அகரக் கோட்டாலம், அணைக்கரை கோட்டாலம், தண்டலை, பெருவங்கூர், வீர சோழபுரம், நீலமங்கலம், மாடூர், நிறைமதி, குரூர் மற்றும் பல்லகச்சேரி, பானையங்கால், கொங்கராயப்பாளையம், கூத்தக்குடி உள்பட 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது.

**அறந்தாங்கி ஒன்றியத்தை வறட்சி பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் பா.ம.க. கோரிக்கை**

அறந்தாங்கி,

அறந்தாங்கி ஒன்றியத்தை முழு வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பா.ம.க.செயற்குழு கூட்டம்

அறந்தாங்கி ஒன்றிய பா.ம.க செயற்குழுக் கூட்டம் அரசர் குளத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர் துரைராஜன் தலைமை தாங்கினார். மாவட்ட விவசாய அணி செயலாளர் காசிவிஸ்வநாதன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கட்சியின் மாநில துணைப்பொதுச் செயலாளர் டாக்டர்அருள்மணி, மாநில மகளிர் சங்க துணை செயலாளர் சீதாலெட்சுமி சுப்பிரமணியன், முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் ஒன்றியத் துணை செயலாளர்கள் பழனிச்சாமி, முருகேசன், மாவட்டத் துணை செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் சிவக்குமார், செந்தில், நிர்வாகிகள் சுந்தரம்பாள், நாகராசன், தர்மராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். ஒன்றிய அவைத்தலைவர் ராசு வரவேற்றார்.

<u>தீர்மானங்கள்</u>

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு பருவமழை பொய்த்ததால் அறந்தாங்கி ஒன்றியத்தில் வரலாறு காணாதவகையில் வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். எனவே மத்திய–மாநில அரசுகள் அறந்தாங்கி ஒன்றியத்தை முழு வறட்சி பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அறந்தாங்கி ஒன்றியம் திருநாளூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவ மையம் அமைக்க வேண்டும். அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சியில் பொதுசுகாதார மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>மதுபானக்கடைகளை மூட வேண்டும்</u>

அறந்தாங்கி ஒன்றியத்தில் உள்ள குரும்பூர் ஒத்தக்கடை, ஆவணத்தான்கோட்டை, வல்லவாரி, அரசர்குளம் கீழ்பாதி ஆகிய பகுதிகளில் பிரதான சாலைகளில் உள்ள மதுபானக்கடைகளை உடனே மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.முடிவில் ஒன்றிய இளைஞர் அணி துணை தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

**கரும்புக்கு கூடுதல் விலை அறிவிக்ககோரி சர்க்கரை ஆலை முன்பு 7–நதேதி ஆர்ப்பாட்டம் கரும்பு விவசாயிகள் சங்கம் முடிவு**



பெரம்பலூர்,

கரும்புக்கு கூடுதல் விலை அறிவிக்க கோரி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி அனைத்து சர்க்கரை ஆலைகள் முன்பு வருகிற 7–ந்தேதி ஆர்ப்பாட்டம் நடத்த கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் முடிவு செய் துள்ளனர்.

<u>மாநில குழு கூட்டம்</u>

பெரம்பலூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில குழு கூட்டம் மாநில தலைவர் பழனிசாமி தலைமை யில் நடந்தது.

மாநில பொதுசெயலாளர் ரவீந்திரன் பேசியதாவது :– மத்திய அரசு நடப்பு அறவை ஆண்டுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ 400 மட்டுமே விலை உயர்த்தியது, கடந்த ஆண்டு விலை 1,700 உடன் சேர்த்தால் நடப்பு ஆண்டு (2013–14)க்கு ரூ 2,100 மத்திய அரசு பரிந்துரை விலை வருகிறது. மாநில அரசு பரிந்துரை விலையையும் சேர்த்து கரும்புக்கு ரூ 2,650 விலை அறிவித்துள்ளது.

டீசல், உரம் விலை உயர்வு உற்பத்தி செலவை அதிகரித் துள்ளது. ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடி செலவு ரூ ஒரு லட்சத்து 6,000 ஆகிறது. சராசரி ஒரு ஏக்கருக்கு 40 டன் விளைச்சல் கிடைத்தால் ஒரு டன் கரும்பு உற்பத்தி செலவு ரூ 2,650 ஆகிறது. சாமிநாதன் குழு உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் தொகை உயர்த்தி தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள் ளது. இதன்படி ஒரு டன் கரும் புக்கு ரூ

4,000 விலை வழங்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் வலியு றுத்தி வருகிறோம்.

<u>குறைத்தது நியாயமல்ல</u>

மத்திய அரசு எதை பற்றியும் கவலைப்படாமல் மத்திய அரசு பரிந்துரை விலை ரூ 2, 100 மட்டுமே விலை அறி வித்து கரும்பு விவசாயிகளை வஞ்சித்து விட்டது. தமிழ்நாடு அரசு தனது பரிந்துரை விலையை உயர்த்தி அறிவிப்ப தற்கு பதிலாக கடந்த 15 ஆண் டுகளாக விவசாயிகள் போராடி பெற்ற மாநில அரசு பரிந்துரை விலையில் நூறு ரூபாயை குறைத்துள்ளது நியாயமல்ல. மத்திய அரசு ஆலை முதலா ளிகள் பாதுகாப்பற்கு என்று வட்டி இல்லாத கடனாக ரூ.7 ஆயிரத்து 200 கோடி தருகிறார் கள். மேலும் முதலாளிகளுக்கு வரிச் சலுகை களை வழங்கு கிறார்கள். விவசாயிகளை தற் கொலைக்கு தள்ளுகிறார்கள்.

<u>7–ந் தேதி ஆர்ப்பாட்டம்</u>

சமீபத்தில் உத்தரபிரதேசத் தில் ஆலை முதலாளிகள் கரும் புக்கு கூடுதல் விலை தர முடியாது என்றும், அறவையை துவங்க முடியாது என்றும் முதலாளிகள் அறிவித்தார்கள். ஆலைகளை கைப்பற்றி மாநில அரசு அறவையை துவங்கும் என்று மாநில அரசு அறிவித்து இதன் பின் முத்தரப்பு பேச்சு வார்த்தை நடத்தி ஒரு டன் கரும்புக்கு ரூ 2,800 அறிவித்துள் ளார்கள். தமிழ்நாடு மாநில அரசு 8.5 லட்சம் ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்துள்ள லட்சக் கணக்கான விவசாயிகளை பாதுகாத்திட கரும்புக்கு நியாயமான விலை அறிவித்து, கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலை முன்பு வரும் 7–ந்தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப் படும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், மாநில பொரு ளாளர் சின்னப்பா, செயலா ளர் கோபிநாத், துணைத் தலைவர் ஜனாத் தனன், நிர் வாகிகள் ஏ.கே. ராஜேந்திரன், அன்பழகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம் விலை குறைய வாய்ப்பு வேளாண் அதிகாரி தகவல்**



திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளத்தின் விலை குறைய வாய்ப்பு உள்ளது என்று வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மக்காச்சோளம் உற்பத்தி

அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச தானியக்கழகம் 2013–2014–ம் ஆண்டில் உலக மக்காச்சோள உற்பத்தி 948 மில்லியன் டன்களாக இருக்கும் என்று கணித்துள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாகும். அமெரிக்காவில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக மக்காச்சோள உற்பத்தியினால் சர்வதேச அளவில் மக்காச்சோளத்தின் விலை குறையத் தொடங்கி உள்ளது. இந்தியாவில் 2012–2013–ம் ஆண்டில் 222 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 2.8 சதவீதம் கூடுதலாகும். மேலும் ரபி பருவத்தில், ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் மத்தியபிரேதேச மாநிலங்களில் மக்காச்சோளம் பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தி அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2013–ம் ஆண்டுக்கு மக்காச்சோளத்தின் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.1,310 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் மக்காச்சோளத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ.1,500–ஐ தாண்டியுள்ளது. தற்போது ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து மக்காச்சோளம் வரத் தொடங்கி உள்ளது. இதனால் தமிழகத்தில் மக்காச்சோள விலை குறைந்து வருகிறது.

ரூ.1,300 விலை

இந்நிலையில் உடுமலைப்பேட்டை சந்தையில் கடந்த 19 ஆண்டுகள் நிலவிய மக்காச்சோள விலையை, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்தது. ஆய்வு முடிவில், அறுவடை நேரமான இந்த மாதம் (டிசம்பர்) மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1,300 முதல் ரூ.1,450 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் இருந்து அதிகப்படியான வரத்தினால் விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனே விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

**‘மா‘ மரங்கள் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி?**



கன்னியாகுமரி,

'மா' மரங்களை பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பது குறித்து இங்கு காண்போம்.

## ‘மா‘ மரங்கள்

மாம்பழம் சுவை மட்டுமல்லாமல் பல்வேறு சத்துக்களையும் கொண்டது. மாம்பழத்தில் “ஏ“, “சி“, மற்றும் “இ“ வைட்டமின்கள் அதிகமாக காணப்படுகிறது. “மா“ பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது உள்ள தட்பவெப்ப நிலைக்கு ஏற்றது போல் அவற்றை முறையாக பராமரித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தினால் கூடுதல் லாபம் பெற முடியும்.

மாம்பழத்தில் நீலம், பெங்களூரா (தோத்தாப்புரி), அல்போன்சா, ருமானி, பங்கனப்பள்ளி, காலாப்பாடி, பீத்தர், செந்தூரா, ஜஹாங்கீர், மல்கோவா, இமாயுதீன், அர்கா அன்மால், அர்கா அருணா, அர்கா நீல்கிரன், அர்கா புனீத், அமரப்பள்ளி, பி.கே.எம். 1, பி.கே.எம் 2, பையூர்1, மல்லிகா, சிந்து, ரத்னா ஆகிய ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

இவற்றில் மல்லிகா, சிந்து, ரத்னா, பி.கே.எம் 2 போன்ற ரகங்கள் உயர் ரகங்களாகவும், கேசர் மற்றும் அமரப்புள்ளி போன்ற ரகங்கள் சுவை மற்றும் அதிக விளைச்சல் தரும் ரகங்களாகவும் உள்ளன. மல்லிகா மற்றும் சிந்து ரகங்கள் விதையில்லாதது.

### பிஞ்சுகள்

மாமரம் இதுவரை பூக்காமல் இருந்தால், 0.5 சதவீத யூரியா கரைசல் (5 கிராம் யூரியா ஒரு விட்டர் நீருக்கு) அல்லது ஒரு சதவீத பொட்டாசியம் நைட்ரேட் கரைசல் (10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் ஒரு லிட்டர் நீருக்கு) என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உருவாக வாய்ப்பு உண்டு.

பூக்கள் பூத்திருக்கும் மாமரங்களில் நாப்தலின் அசிட்டிக் அமிலம் தெளிப்பதால் அதிக பிஞ்சுகள் உருவாவதோடு, பிஞ்சுகள் உதிர்வதும் தடுக்கப்படும். அதே நேரத்தில் பிஞ்சுகள் உருவாகி உள்ள மாமரங்களில் 2 சதவீத பொட்டாசியம் நைட்ரேட் தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு பழங்கள் உற்பத்தி

அதிகரிக்கும். மாமர தோப்புகளில் தோழமை தாவரங்களான சீத்தாப்பழ கன்றுகள் மற்றும் ஆமணக்குச் செடிகளை பயிரிடுவதால் கூடுதல் வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன.

<u>பூச்சிகளும், கட்டுப்படுத்தும் வழிகளும்...</u>

மாமரங்களை மூன்று விதமான தத்துப்பூச்சிகள் தாக்குகின்றன. மாமரத்தின் கிளைகளில் தத்துப்பூச்சியில் தாக்குதலை எளிதாக கண்டறிய முடியும். தத்துப்பூச்சியின் தாக்குதலினால் பூக்களின் எண்ணிக்கை குறைவதோடு பூக்களிலும் அதன் பாதிப்பு ஏற்படும். தத்துப் பூச்சியின் தாக்குதல் குறைவாக இருப்பின் 3 சதவீத வேப்ப எண்ணை ஒரு லிட்டர் நீருக்கு 5 மி.லி அல்லது வேப்பம் சோப்பு ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

<u>தத்துப்பூச்சியின் தாக்குதல்</u>

மத்திமமாக இருப்பின், ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் "பெவேரியா பேஸியானா" என்ற உயர்ரக பூஞ்சாண மருந்தினை அதிக திறன் உள்ள தெளிப்பான் மூலம் தெளிப்பு வேகத்தை குறைத்து மாமரம் மற்றும் பூக்களின் மீது தெளிப்பதால் தத்துப்பூச்சிகள் அழியும். தாக்குதல் அதிகமாக இருப்பின், "அசிபேட் 75 எஸ்.பி" ஒரு கிராம் ஒரு லிட்டர் நீருக்கு அல்லது "கார்பரைல் 50 டபிள்யு.பி" ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் பூ உருவாகும் சமயத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து 2–வது முறையும் பூக்களின் மீது தெளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் நனையும் கந்தகம் 2 கிராம் ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளித்தால் செஞ்சிலந்தியின் தாக்குதலை தடுக்க முடியும்.

பிணைக்கும் புழுகள் எச்சத்தால், மாமரங்களின் பூக்களில் கூடுகள் கட்டி வலைபோல் பின்னி பூக்களை உண்பதால் மகசூல் பாதிக்கப்படுகின்றது. இதனால் பூக்களில் மகரந்த சேர்க்கை நடைபெறுவதும் தடுக்கப்படும். பிணைக்கும் புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த "பேசலோன் 35 இ.சி" 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு

அல்லது “புரப்னோபாஸ்“ 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் பூக்களின் மீது தெளிக்க வேண்டும்.

<u>இலை கொப்புளம்</u>

இலை கொப்புளம் மற்றும் அசுவிணியை கட்டுப்படுத்த “டைமித்தோயேட்“ 2 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

மாமர தோப்புகளில் கரையான் புற்றுகளை அழிக்க சோற்றுக்கற்றாழை செடிகளை நடலாம். மேலும் மாமரங்களில் தோன்றும் கரையானை அழக்க சிறிதளவு சர்க்கரைக் கரைசலை மரத்தின் மீது தெளிப்பதால் செவ்வெறும்புகள் சர்க்கரையை தேடிவந்து கரையான்களை அழிக்கும்.

மாமரத்தில் பழங்களில் தோன்றக்கூடிய பழ ஈயை கட்டுப்படுத்த பிரத்தியேக இனக்கவர்ச்சி பொறியை ஒரு ஏக்கருக்கு 2 என்ற அளவில் பூக்கும் தருணத்தில் வைத்துவிட வேண்டும். இதனால் பழ ஈக்கள் பூ பூக்கும் தருணத்தில் முட்டையிடுவது தவிர்க்கப்பட்டு இனக்கவர்ச்சிப் பொறியால் அவை ஈர்க்கப்பட்டு அழிக்கப்படும்.

தகவல்:– விஜயகுமார், பூச்சியியல் துறை வல்லுனர், காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இருதரப்பு மீனவர்கள் பேச்சுவார்த்தை: பிரதமருக்கு சரத்குமார் வலியுறுத்தல்

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இருதரப்பு மீனவர்களையும் அழைத்து பேச பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ச.ம.க தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில், "தமிழக மீனவர் பிரச்சினையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரையும், தொடர்ந்து, பிரதமரையும் தமிழகம் மற்றும் புதுவை மீனவ பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாகப்பட்டினத்தில் ச.ம.க சார்பில், தமிழக மீனவர்களை இலங்கை ராணுவம் தாக்கப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில், தமிழக மீனவர்களையும், இலங்கை மீனவர்களையும் அழைத்து பேசவைத்து, சுழற்சி முறையில் மீன்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

வரும் ஜனவரி 20-ம் தேதி இரு நாட்டு மீனவர்கள் மற்றும் அரசுகள் இடையே டெல்லி அல்லது சென்னையில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யுமாறு வெளியுறுவுத்துறை அமைச்சரிடம் பிரதமர் கூறியுள்ளதாக மீனவ பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதையும், அவர்களது உயிருக்கும் உடமைக்கும் சேதம் விளைவிப்பதையும், அவர்களது குடும்பத்தினர் அமைதியும் மகிழ்ச்சியும் இழந்து வாடுவதையும் இனியும் விளையாட்டாகக் கருதக் கூடாது. இருதரப்பு மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்துவதாக

அறிவித்திருப்பதை உறுதியாக்கி, தமிழக மீனவர் பிரச்சினையை உண்மையான அக்கறையோடு முடிவுக்கு கொண்டுவர பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கிலாந்து நாட்டுக்கும், அமெரிக்க நாட்டுக்குமிருக்கும் உணர்வை விட இந்தியாவிற்கு அதிக அக்கறையும், உணர்வும் இருக்கிறது என்பதை இதன் மூலம் மத்திய அரசு நிரூபிக்க வேண்டும்" என்று சரத்குமார் கூறியுள்ளார்.

## கீழக்கரை தொதல்



இலங்கை இஸ்லாமியர்களின் சமையலில் இடம்பெறும் இனிப்பு வகை உணவுகளில் தொதல் மிகவும் முக்கியமான உணவு. இது பச்சரிசி, தேங்காய், சீனி, முந்திரி, ஏலக்காய் உட்பட்ட பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இப்பலகாரம் சர்க்கரைக் கழி என்று அழைக்கப்படுகிறது.

தென்மாவட்டங்களில் குறிப்பாக கீழக்கரை, மரைக்காயர் பட்டிணம், காயல்பட்டிணம், அதிராமப்பட்டிணம் ஆகிய ஊர்களில் வாழும் இஸ்லாமியர்கள் வர்த்தக ரீதியாக இலங்கைக்குச் சென்று வந்ததன் வழியாக அங்கு இருந்த பலவகையான உணவு வகைகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளது. அதில் தொதல் முக்கியமான பண்டமாகும்.

இன்று ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையைச் சுற்றி தென்னந்தோப்புகள் அதிகம். இதனால் கீழக்கரையில் 50க்கும் மேற்பட்டவர்கள் குடிசைத் தொழிலாகத் தொதலை செய்து சிங்கப்பூர், மலேசியா, வளைகுடா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இங்குச் செய்யப்படும் தொதல் ஒரு மாதம் ஆனாலும் கெடாமல் இருக்கிறது. ஒரு கிலோ தொதல் ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.. 250 வரையிலும் விற்கப்படுகின்றது.

**செய்முறை**

பச்சரிசி 1 கோப்பை, 5 தேங்காய், சர்க்கரை 1 கிலோ, பனை வெல்லம் 250 கிராம், 4 மேசைக் கரண்டி ஜவ்வரிசி (அல்லது அதே அளவு வறுத்த பாசிப்பருப்பு) ஏலக்காய் தேவையான அளவு பச்சரிசியை ஊறவைத்து இடித்து அரித்து மாவாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேங்காயைத் துருவி அதன் பாலைத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் அகன்ற சட்டியில் பச்சரிசி மாவு, தேங்காய்ப் பால் (6 டம்ளர்), சீனி, பனை வெள்ளம், பாசிப்பருப்பு இவற்றை ஒன்றாக ஊற்றி இரண்டு மணி நேரம் கிளர வேண்டும்.

பின்னர் 2 டம்ளர் தேங்காய்ப் பாலை ஊற்றிக் கலவை திரண்டு அல்வா போன்ற வடிவம் வரும் வரையிலும் கிண்ட வேண்டும். பின்னர் ஏலக்காயைப் பொடியாக்கித் தூவ வேண்டும். பின்னர் தேவைப்பட்டால் முந்திரிப் பருப்பை மேலே தூவலாம்.

அல்வா வடிவத்தில் கையில் ஒட்டாத பதம் வந்ததும் சட்டியை அடுப்பில் இருந்து இறக்கி ஆற வைக்கவும். நன்றாக ஆறிய பின்னர் கேக்குகள் போன்று வெட்டிப் பரிமாறலாம்.